# வாலிபர் உலகம்

JESUS REDEEMS MINISTRIES

மலர்: 13 | இதழ்: 4 | ஜுன் | ஆண்டு சந்தா ₹100/




தடைகளைத் தாண்டி, தாகத்தோடு நீ அடைய வேண்டியது

# உன் இலக்கு

# INDEX


| | |
|---|---|
| 04 | கர்த்தருக்காக வைராக்கியம்... |
| 10 | இலக்கு |
| 16 | ஸ்டீபன்சனின் விடாமுயற்சி |
| 30 | RED ALERT |


இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats app மூலமாகவோ **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்

வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!

## 30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் **சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!** Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| A/c. Name | : | JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : | 054100710400515 |
| BANK | : | TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : | Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : | 000054 |
| IFS CODE | : | TMBL0000054 |
| MICR CODE | : | 627060021 |
| SWIFT CODE | : | TMBLINBBTUT |

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in

**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் **இணை ஆசிரியர்:** அவினாஷ் **ஆசிரியர் குழு:** ஜிஷ்யா | ரேச்சல் | கிளாடிஸ் ரவி | சுமா | கெத்சி | காலேப் | வயலா | சதீஷ் | ரெபேக்கா
**வடிவமைப்பு:** எபினேசர் | டேவிட்சன் | செல்வி | **நிர்வாகம்:** பெனீட்டா | ஜெயா

# தலைவாசல்

# தொடர்ந்து ஓடு

**அன்பான இளம் நெஞ்சங்களுக்கு, அன்பின் வாழ்த்துக்கள்!**

ஜார்கண்ட் (Jharkhand) மாநிலத்தில் ஓர்மஞ்சி (Ormanjhi) கிராமத்தில் ஒரு ஏழை குடும்பத்தில் பிறந்து, சாதிக்க வேண்டும் என்பதற்காக தனக்கென்று ஒரு இலக்கை ஏற்படுத்தி அதற்காக தன் முழு கவனத்தையும் செலுத்தி, கால்பந்து விளையாட்டில் சிறந்த வீராங்கனையாக வலம் வருகிறார் அனிதா குமாரி. குடும்பத்தின் ஏழ்மை, சமுதாயத்தில் ஏற்படும் அவதூறான பேச்சு, மேலும் பல எதிர்ப்புகள் இன்னல்கள் மத்தியிலும் சாதித்து காட்டுவேன் என்று வைராக்கியத்தோடு போராடி, வெற்றிப் பெற்று பல பதக்கங்களை வென்று, இன்று பெண்களுக்கான கால்பந்து போட்டியில் Under 17 Fifa World Cupக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஏழ்மையான குடும்பம், குடிசை வீடு, சரியான உணவு இல்லாமல் இருந்தாலும் தன்னுடைய இலக்கை அடைய ஓய்வில்லாது பயிற்சி செய்து இந்தியாவின் பெயரை பெருமைப்படுத்த அணிவகுத்து நிற்கிறார் அனிதா குமாரி. இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடியதால், இன்றைக்கு முழு இந்தியாவையேத் திரும்பி பார்க்க வைத்து விட்டார்.

எனக்கன்பான வாலிபனே, எத்தனை முறை வீழ்ந்தாலும் நீ எழும்ப முடியும். உன் இலக்கு இயேசுவாக இருந்தால், அவரை நோக்கி உன் ஓட்டம் இருந்தால், உன் ஓட்டத்தில் எத்தனை இடர்கள் வந்தாலும், உன்னை சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பெலப்படுத்தி நிலைநிறுத்துவார். உன்னுடைய தோல்விகளைக் கண்டுத் துவண்டு போகாதே

**"தடைகளைத் தாண்ட தைரியம் கொள்"**
**"துன்பங்களைத் தாங்க துணிச்சல் கொள்."**



**உலக கோப்பைக்காக உயிரைக் கொடுத்து, உடற்பயிற்சி செய்து சாதிக்க துடிக்கும் இளைஞர்கள் முன்...**
**உனக்காக உயிரை கொடுக்கவே பரலோகத்திலிருந்து இறங்கிய இயேசுவின் அன்பை எடுத்துரைப்பதே உன் கடமையும் கனவுமாக இருக்கட்டும்.**
**"இலக்கு என்பது இயேசுவாக இருந்தால், இழப்பிலும் அவரை இறுதிவரை அறிவிப்பது உன் இன்பமாகட்டும்."**

கிறிஸ்துவின் பணியில்
**அவினாஷ்**

கிறிஸ்துவை அறியாத குடும்பத்தில் பிறந்த சகோதரியை, தேவன் தேடி வந்து தன் அன்பினால் இரட்சித்து, இன்றைக்கு தன் கனவையும், தனது லட்சியத்தையும் விட்டு, தேவனுடைய சித்தத்திற்கு விட்டுக் கொடுத்து செயல்பட்டு வரும் சகோதரி ஸ்ரீ லட்சுமியோடு ஓர் நேர்காணல்.

சாட்சி: திவ்யா



# கர்த்தருக்காக வைராக்கியம்...

சகோதரி ஸ்ரீ லட்சுமி

**உங்களது சிறுபிராயம் பற்றி சொல்லுங்களேன்?**

நான் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் என்ற பகுதியில் ஆண்டவரை அறியாத குடும்பத்தில் திரு. கோதண்ட ராமன், திருமதி மோகன வடிவு தம்பதியருக்கு இரண்டாவது குழந்தையாகப் பிறந்தேன். எனக்கு ஹரீஷ் என்ற அண்ணன் இருக்கிறான். அவன் Designing Engineer ஆக வேலைப் பார்த்து வருகிறான். நான் இரண்டாம் வகுப்பு படிக்கும்போது, என்னுடைய அம்மா இரட்சிக்கப்பட்டார்கள். அதனால் அம்மா என்னை ஆண்டவருக்குள் வளர்த்தார்கள் ஆண்டவருடைய அன்பைக் குறித்து அதிகமாய் போதிக்கப்பட்டேன். ஆனால் இரட்சிப்பின் அனுபவம் இல்லாமல் இருந்தேன்.

**அம்மா ஆண்டவருக்குள் வழி நடத்தினார்கள்... சிறு வயதிலிருந்து உங்களது படிப்பு எப்படி இருந்தது?**



சகோதரி ஸ்ரீ லட்சுமியின் குடும்பம்

நான் சிறு வயதிலிருந்தே நன்றாகப் படிப்பேன். ஆனால் எவ்வளவு முயற்சி எடுத்தாலும், 500க்கு 490 மதிப்பெண்களுக்கு மேல் எடுக்க முடியவில்லை. நீ ஆண்டவரிடம் எதைக் கேட்டாலும் உனக்காக செய்வார் என்று என்னுடைய அம்மாவின் நண்பர் ஒருவர் எனக்கு சொன்னார். அப்பொழுது எனக்கு ஒன்பதாம் வகுப்பு காலாண்டு தேர்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அன்றிலிருந்து நான் ஆண்டவரிடம் எனக்கு ஞானத்தைத் தாரும் என்று தினமும் ஜெபித்துப் படிக்க ஆரம்பித்தேன். நன்றாகத் தேர்வு எழுதி 500க்கு 500 மதிப்பெண் பெற்று முதலிடம் எடுக்க தேவன் உதவி செய்தார். அப்பொழுது தான் என் தேவன் எவ்வளவு வல்லமையான, மகிமையான தேவன் என்பதை அறிந்து கொண்டேன். அன்று இயேசுவை என்னுடைய வாழ்வில் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, என்னுடைய வாழ்வை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தேன். பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 494/500 எடுக்க ஆண்டவர் உதவி செய்தார்.

**சூப்பர்... பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் நல்ல மதிப்பெண்களுடன் வெற்றிப் பெற்றீர்கள்... அதேபோல் தொடர்ந்து படிப்பில் சிறந்து விளங்க முடிந்ததா?**

11ம் வகுப்பு படிக்கும்போது எனது சரீரத்தில் எதிர்ப்பு சக்தி குறைவாய் இருந்ததால் மிகவும் பெலவீனப்பட்டேன். அடிக்கடி பெலவீனமடைந்ததால் சரியாக படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. ஒருநாள் என்னுடைய ஆசிரியர், ''இப்படி அடிக்கடி



பெலவீனமாய் இருக்கிறாய், உன்னால் தேர்வு எழுத முடியுமா?'' என்று கேட்டார். அதுவரை எந்த பயமும் இல்லாமல் இருந்த எனக்கு இந்தக் கேள்வி கேட்டப்பின்பு மிகுந்த பயத்தைக் கொண்டு வந்தது. என்னால் தேர்வு எழுத முடியாமல் போய்விடுமோ என்று மிகவும் பயந்தேன். அப்பொழுது தான் கோவையில் Achievers meeting நடைபெறுகிறது என்று அறிந்து, அதில் கலந்து கொண்டேன். தேவன் என்னுடைய எல்லா பயத்திலிருந்து எனக்கு விடுதலை கொடுத்தார். அதுமட்டுமல்லாமல் பெலவீனத்தை முற்றிலுமாக மாற்றினார். அதன் பிறகு நன்றாகப் படித்து தேர்வை எழுதி 1159/1200 மதிப்பெண் பெறவும், கணிதத்தில் 200/200 மதிப்பெண்கள் பெறவும் தேவன் உதவி செய்தார்.

**சூப்பர்... பெலவீனத்தில் தேவன் உங்களோடு இருந்தார்... மேல்நிலைப் பள்ளிப் படிப்பையும் படித்தீர்கள்... தொடர்ந்து உங்களது கல்லூரி வாழ்க்கையைப் பற்றி சொல்லுங்களேன்?**

எந்த கல்லூரியில் படிக்க வேண்டும், என்ன course படிக்க வேண்டும் என்று ஜெபித்துக் கொண்டிருந்தேன். CMC கல்லூரியில் மருத்துவம் படித்து, மருத்துவராகி ஆண்டவருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்பதே எனது விருப்பமாக இருந்தது. அந்த ஆண்டு NEET தேர்வு எழுதி வெற்றி பெற்றால்தான், மருத்துவக் கல்லூரியில் இடம் பெற முடியும் என்ற சட்டம் நடைமுறைக்கு வந்தது. நானும் NEET தேர்வுக்காக நன்றாகப் படித்து தேர்வு எழுத தேவன் உதவி செய்தார். அந்த ஆண்டு மருத்துவ கலந்தாய்வு நடைபெற காலதாமதம் ஆனதால், பெற்றோரின் ஆலோசனையின் படி வேளாண்மை (Agriculture) படிக்க விண்ணப்பித்தேன். தஞ்சாவூர் அரசு வேளாண்மை கல்லூரியில் Agri படிக்க இடம் கிடைத்து, அந்தக் கல்லூரில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தேன். ஆனால் என்னுடைய மருத்துவ கனவு ஒருபக்கம் போய்க் கொண்டிருந்ததால், நான் கண்டிப்பாக மருத்துவராகி விடுவேன், மருத்துவ கல்லூரியில் இடம் கிடைக்கும் என்று எல்லாரிடமும் சொல்லி வந்தேன். இப்படியே நாட்கள் சென்றுக் கொண்டிருந்தது. ஒருநாள் நான் ஜெபித்துக் கொண்டிருக்கு ம்போது, நான் Agri course படிக்க வேண்டுமென்பதே ஆண்டவருடைய சித்தம் என்று வெளிப்படுத்தினார். ஆண்டவருடைய சித்தத்திற்கு என்னை ஒப்புக் கொடுப்பது எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. ஏனென்றால், எனக்கு Agri என்றாலேப் பிடிக்காது, அது என்னவென்றெ எனக்குத் தெரியாது. ஆனால் என்னுடைய விருப்பத்தைவிட ஆண்டவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்பது ரொம்ப முக்கியம் என்பதை உணர்ந்து கொண்டேன். ஆண்டவருடைய சித்தத்திற்கு என்னை ஒப்புக்கொடுக்கவில்லை என்றால், அது ஆண்டவரைத் துக்கப்படுத்தும் என்பதை அறிந்து எனது மருத்துவ கனவை விட்டு ஆண்டவரின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தேன். முதலில் மிகவும் கஷ்டமாகத் தான் இருந்தது. எனக்காக நான் வைத்திருந்த திட்டத்தை மறந்து, முழுவதுமாக என்னை உமக்கு ஒப்புக்கொடுக்க கிருபை தாரும் என்று இயேசுவை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தேன். ஆண்டவர் கிருபையைக் கொடுத்தார். என்னை ஆண்டவருடைய சித்தத்திற்கு முழுமையாக ஒப்புக்கொடுத்தேன். ஆண்டவருடைய சித்தத்தின்படி course நன்றாக படித்து முடிக்க தேவன் உதவி செய்தார். கல்லூரியில் பரிசுத்தமாய் வாழவும், ஆண்டவருக்காக வைராக்கியம் பாராட்டவும் தேவன் உதவி செய்தார்.

**ஓகே... ஆண்டவரின் விருப்பப்படி வேளாண்மைப் படிப்பை படித்து முடித்தீர்கள்... உங்களுடைய இரட்சிப்பின் அனுபவத்தைப் பற்றி சொல்லுங்களேன்?**



நான் பத்தாம் வகுப்பு படிக்கும் போது இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டேன். அதன் பிறகு அபிஷேகம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆண்டவரிடம் ஜெபித்துக் கொண்டிருந்தேன். அந்நாட்களில் நான் சினிமா படங்கள் அதிகமாகப் பார்ப்பேன். ''நீ சினிமாவிற்கு முதலிடம் கொடுக்கிறாய், அதற்கு முக்கியத்துவம்

**எனக்கு வேலை போனாலும் பரவாயில்லை, சுவிசேஷத்தை அறிவியாமல் இருக்க மாட்டேன்**

கொடுக்கிறாய், உன் இருதயத்தில் அது நிறைந் திருக்கும்போது, நான் எப்படி உனக்குள் வாசம் செய்ய முடியும்'' என்று ஆண்டவர் என்னோடு பேசினார். எவ்வளவோ முயற்சித்தும் என்னால் சினிமாப் பார்ப்பதை விடமுடியவில்லை. இயேசுவே நீர் தான் இந்த பாவத்திலிருந்து எனக்கு விடுதலை தரமுடியும் என்று என்னை ஒப்புக்கொடுத்து ஜெபித்தேன். தேவன் எனக்கு அற்புதமாய் இந்த பாவத்திலிருந்து விடுதலைக் கொடுத்து, அபிஷேகத்தையும் கொடுத்தார்.

### ஒகே... அபிஷேகம் பெற்றீர்கள்... அதன்பிறகு ஆண்டவருக்காக ஏதாவது செய்தீர்களா?

ஆண்டவருக்காக ஏதாவது செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டேன். ஆனால் என்னால் செய்ய முடியவில்லை. அந்த நேரத்தில்தான் 2021ஆம் ஆண்டு நடைபெற்ற Igniters Campயில் கலந்து கொள்ள தேவன் உதவி செய்தார். என்னுடைய ஆவிக்குரிய வாழ்வில் காணப்பட்ட எல்லா சோர்வுகளையும் ஆண்டவர் எடுத்துப் போட்டார். சுவிசேஷத்தைத் தைரியமாகவும், வைராக் கியமாகவும் சொல்ல வேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டேன். எந்த சூழ்நிலையிலும் தேவனுக்காக வைராக்கியமாய் நிற்க தேவன் உதவி செய்து வருகிறார். என்னுடைய நண்பர்கள் மற்றும் யாரைப் பார்த்தாலும் சுவிசேஷத்தை அறிவிக்கவும், இரட்சிப்புக்குள் நடத்தவும் தேவன் கிருபை கொடுத்து வருகிறார். கிராம ஊழியம் செய்யவும் தேவன் உதவி செய்தார். சுவிசேஷம் அறிவித்ததினால் எனது வேலையை இழக்க வேண்டிய சூழ்நிலை உண்டானது. எனக்கு வேலை போனாலும் பரவாயில்லை, சுவிசேஷத்தை அறிவியாமல் இருக்க மாட்டேன் என்று வைராக்கியமாய் சுவிசேஷம் அறிவித்தேன். என் வேலையை இழந்து விட்டேன். ஆனால் இன்றைக்கு கர்த்தருடைய சித்தத்தின்படி அவருடைய ஊழியக்காரியாக பயன்படுத்தி வருகிறார். நான் நினைத்ததற்கும், வேண்டியதற்கும் மேலாக ஆசீர்வதித்து என்னை நடத்தி வருகிறார்.



### வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

நாம் நினைப்பதற்கும் வேண்டுவதற்கும் மேலாக நடத்துகிற தேவனை சார்ந்து, அவருடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கும் போது, அவரே எல்லாவற்றையும் தகப்பனாக இருந்து செய்து முடிப்பார். ''உங்கள் நினைவுகள் என் நினைவுகள் அல்ல'' என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார். ஆம், நாம் நினைப்பதைவிட, தேவன் நம்மை நினைத்து வைத்திருப்பது அதிகம். எனவே படிப்பு, வேலை, திருமணம் எதுவாக இருந்தாலும் ஆண்டவரிடத்தில் கேளுங்கள். ஆண்டவரின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுங்கள். அவர் உங்களுக்கு வழியை ஆயத்தப் படுத்தி தருவார்.

**அன்பான வாலிபர்களே! அருமை சகோதரி ஸ்ரீ லெட்சுமியோடு கர்த்தர் பேச முடியுமானால், இன்றைக்கு உங்களோடும் பேசுவார். ஆனால் அவருடைய பாதத்திற்கு சென்று அவர் சித்தத்திற்கு காத்திருந்து ஒப்புக்கொடுக்க வேண்டும். சில நேரங்களில் உங்களுடைய கனவுகளை இழக்க வேண்டியது வரும். கர்த்தருக்காக நீங்கள் சில இழப்புகளை சந்திக்கும்போது, கர்த்தர் உங்கள் வாழ்க்கையின் கனவுகளை பல மடங்காக ஆசீர்வதித்து கொடுப்பார் ■**

வேத ஆராய்ச்சி: ரேச்சல்

# தானியேல்

## (இஸ்ரவேலரின் கடைசி இலக்கு)

**அன்பான இளம் நெஞ்சங்களே! இந்த மாதமும் பெரிய தீர்க்கதரிசன நூல்களில் ஐந்தாம் (கடைசி) புத்தகமான "தானியேல்" பற்றி சுருக்கமாகக் காணலாம்.**

### அறிமுகம்

தானியேல் புத்தகம், ஒரே உண்மையான தேவனின் வல்லமை, உலகத்தை நியாயந்தீர்த்து, உலக வல்லமையையும் முரட்டாட்டத்தையும் முறியடித்து, தமது மக்களை அவர்கள் விசுவாசத்தின்படி மீட்டெடுத்தலாகும். அந்நிய ஆதிக்க நாட்களில் தலைமறைவாயிருந்த இஸ்ரவேலரைக் குறித்து, தேவ திட்டங்களை எடுத்துக்காட்ட, அவர்களை ஊக்குவிக்க இப்புத்தகம் எழுதப்பட்டது.

**ஆசிரியர்:** தானியேல்

**காலம்:** கி.மு. 530

**அதிகாரங்கள்:** 12

**வசனங்கள்:** 357

**வார்த்தைகள்:** 11, 606

**முக்கிய நபர்கள்:**

தானியேல்

சாத்ராக்

மேஷாக்

ஆபேத்நேகோ

நேபுகாத்நேச்சார் (ராஜா)

தரியு (ராஜா)

கோராகு (ராஜா)

மிகாவேல் (தூதன்)

### தானியேல் - சுருக்கம்

தானியேலின் வரலாறு

பாபிலோனின் சிறையிருப்பில் தானியேல் (1:1-7 வசனங்கள்)

பாபிலோனில் தானியேலின் நேர்மை (1:8-16 வசனங்கள்)

பாபிலோனில் தானியேலின் கீர்த்தி (1:17-21 வசனங்கள்)

**யூதரல்லாத நாடுகளைக் குறித்த தீர்க்கதரிசனம்**

- பெரிய சிலையைக் குறித்து நேபுகாத்நேச்சாரின் கனவு (2ம் அதிகாரம்)
- எரியும் அக்கினிச்சூளை - ஒரு விசுவாசப்பாடம் (3ம் அதிகாரம்)
- நேபுகாத்நேச்சாரின் கனவு - பெரிய விருட்சம் (4ம் அதிகாரம்)
- பெல்ஷாத்சாரின் விருந்து: சுவரில் தோன்றிய கை எழுத்துக்கள் (5ம் அதிகாரம்)
- சிங்கக்கெபியில் தானியேல் (6ம் அதிகாரம்)
- 4 பெரிய மிருகங்களைக் குறித்து தானியேலின் கனவு (7ம் அதிகாரம்)

**இஸ்ரவேலரைக் குறித்த தீர்க்கதரிசனத் திட்டங்களைக் குறித்த தானியேலின் கனவு**

- வெள்ளாட்டுக்கடா, ஆட்டுக்கடா மற்றும் சிறிய கொம்பு குறித்த தீர்க்கதரிசனம் (8ம் அதிகாரம்)
- ஒரு வருடத்தின் 70 வாரங்களைக் குறித்த தீர்க்கதரிசனம் (9ம் அதிகாரம்)
- இஸ்ரவேலரின் வருங்கால தரிசனத்தைக் குறித்த தானியேலின் தரிசனம் (10, 11, 12 அதிகாரங்கள்)

### தானியேலில் கிறிஸ்து

வரப்போகும் மேசியாவாக கிறிஸ்து தானியேல் புத்தகத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளார். அந்த மேசியா (9:25,26)படி வெட்டப்படுவார், கிறிஸ்து ஒரு பெரிய கல்லாகவும் பெயர்ந்து வந்து உலகில் உள்ள நாடுகளை நொறுக்கிப் போடுவது போலவும் (2:34,45), மனுஷகுமாரனாகவும் (7:13), அநாதி காலம் (7:22). சித்தரிக்கப்பட்டுள்ளது தானியேல் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

Heart Beat

ஆலோசனை: அலி



# குழப்பத்தில் ஜோதி...

நான் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதி இருக்கிறேன். நான் 8ஆம் வகுப்பு படிக்கும் போது, கல்லூரியில் படிக்கும் ஒரு நபரை காதலிக்க ஆரம்பித்தேன். அவரும் என்னை காதலிக்கிறேன் என்று சொன்னார். என்னை அவர் மிகவும் நேசிப்பார், என்னை கண் கலங்காமல் பார்த்துக் கொள்வேன் என்று பல முறை சொல்லியிருக்கிறார். அவரை திருமணம் செய்ய விரும்புகிறேன். இந்த ஐந்து ஆண்டு அன்பில் அவரிடம் நான் ஒரு மாற்றத்தையும் காணவில்லை. ஆகையால் திருமணம் செய்ய முடிவு எடுத்திருக்கிறேன். மேலும் எங்கள் வீட்டில் எனது தகப்பனார் தினமும் குடித்து விட்டு வந்து, என்னையும் என் அம்மாவையும் அடிப்பார். இந்த நரக வேதனையில் இருந்து வெளியே வர, என் திருமணம் தான் சரியான முடிவாக தெரிகிறது. ஒருபக்கம் சிறந்த ஒரு தலைமை ஆசிரியராக வேண்டும் என்ற கனவு இருந்தாலும், இந்த நரக வேதனையிலிருந்து வெளியே வர வேறு வழி தெரியவில்லை. என்னுடைய முடிவு சரி என்று தான் தோன்றுகிறது, மறுபக்கம் பயமாகவும் இருக்கிறது, குழம்பி இருக்கிறேன் - ஜோதி, திருநெல்வேலி.

அன்பு சகோதரி ஜோதி! உங்கள் வேதனையும், பாதிப்பும் புரிகிறது. ஒருபுறம் பெற்ற தகப்பனால் நரக வேதனை, மற்றொரு புறம் எதிர்பார்க்காத இடத்தில் இருந்து வரும் அன்பு. அறிந்த உறவில் வரும் துன்பத்தை விட, அறியாத உறவிலிருந்து வரும் சந்தோஷம் போதும் என்று சொல்லி, நீங்கள் திருமணத்திற்கு தயாராகும் நிலையில் உள்ளீர்கள்.



ஜோதி! உங்கள் குடும்பத்தில் ஏற்படும் வேதனையான சம்பவம் மறுக்க முடியாதவை, கண்டிப்பாக அது வருந்தத்தக்கது. அந்த வேதனையிலிருந்து வெளியே வர நீங்கள் மற்றொரு வேதனையான பாதைக்கு சென்று விடக் கூடாது என்பதே மிக முக்கியமான கருத்து. நீங்கள் விரும்பும் நபர் இதுவரை உங்களை கண் கலங்காமல் பார்த்துக் கொண் டிருக்கலாம். ஆனால் திருமணம் என்று ஒன்று நடந்து அரங்கேறியப் பின்னர், அவரின் உண்மை நிலை மாறினால், உங்களின் நிலையும் உங்கள் தாயைப் போல ஒரு சோகமான தொடர் கதையாய் மாறலாம். எனவே சற்று சிந்தித்து செயல்படுங்கள்.


மேலும் 12வது படிக்கும் நீங்கள், உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுப்பதும், படிப்பை தவிர்த்து திருமண வாழ்க்கையை தொடர்வதும் எந்த வகையில் உங்களுக்கு சாதகமாக முடியும் என்று தெரியவில்லை. இந்த வயதில் எடுக்கும் தீர்மானம் உங்களுக்கு ஒரு பெரிய பாதிப்பையும், இழப்பையும் ஏற்படுத்த வாய்ப்பு உண்டு.

ஒருபக்கம், ஒரு சிறந்த தலைமையாசிரியராக வேண்டும் என்பதே உங்களின் கனவாக இருக்கிறது. ஆனால் தற்போதைய வேதனையானப் பாதையை கடப்பதைவிட, ஒரு தலைமை ஆசிரியராக மாறி வெற்றி பாதையில் செல்வதைவிட, அறியாத ஆபத்தான திருமண வாழ்க்கையில் அடியெடுத்து வைக்க முயல்கின்றீர்கள்.




### ஒருவேளை இந்த வேதனையான பாதையை தொடர்ந்தால்...

- உங்களுடைய 12வது படிப்பு முடித்து, கல்லூரிப் படிப்பை தொடர்ந்து, பின்னர் B.Ed போன்ற படிப்பை தொடர்ந்து, உங்கள் கனவாகிய தலைமை ஆசிரியர் என்ற இலக்கை அடைய வாய்ப்பு உண்டு.
- பல தடைகளையும், வேதனை களையும் தாண்டி கனவை அடைந்தேன் என்ற மகிழ்ச்சி உண்டாகி, உங்களைப் போன்ற பல பெண்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்கலாம்.
- ஒருவேளை உங்கள் தகப்பன், மனம் மாறி குடிப்பழக்கத்தை விட வாய்ப்பு உண்டு. உங்களின் வாழ்க்கையில் முட்டுக்கட்டையாய் இருந்த தகப்பன், ஒரு ஊன்றுகோலாக மாற வாய்ப்பு உண்டு.
- தகப்பனின் அன்பு கிடைத்ததால், எந்த காதல் வாழ்க்கை தான் சிறந்தது என்று யோசித்தீர்களோ, அந்த உறவு சீரானது, சிறந்தது அல்ல என்று முடிவு செய்து, மனம் மாறினால் படிப்பில் கவனம் செலுத்த வாய்ப்பு உண்டு.





### ஒருவேளை திருமணமே முடிவு என்று யோசித்து படிப்பை தவிர்த்து, தவறான முடிவை எடுத்தால்...

- வாழ்க்கையில் பல வேதனைகளை அனுபவித்த தாயாருக்கு மற்றும் ஒரு வேதனையும், அவமானமும் நேரிட வாய்ப்பு உண்டு.
- உங்களின் செயலால் உங்களின் குடும்பத்தில் மற்றொரு பூகம்பம் வெடித்து, உங்கள் தாயாரை நீ இழக்கவும் வாய்ப்பு உண்டு.
- நீங்கள் மலை போல நம்பியிருந்த காதலன் கைவிட வாய்ப்பு உண்டு.
- ஒருவேளை அவன் கைவிட்டால் உங்களின் நிலை என்ன? படிப்பை இழந்து, பெற்றோரை இழந்து, வாழ்க்கையின் கனவாகிய தலைமை ஆசிரியர் என்ற கனவையும் இழக்க நேரிடுமே.

சற்று சிந்தித்து செயல்பட வேண்டும். இன்றைய சூழலில் எளிதாக எதையும் பெற்றுவிட முடியாது. ஒரு இலட்சியத்தை அடைய பல இன்னல்களையும், நெருக்கங்களையும் தாண்டி தான் சாதிக்கவோ, சாதனையைப் படைக்கவோ முடியும். பல நேரம் குறுக்கு வழியில் சென்று விடலாம் என்று யோசித்தால் அது பெரும் ஆபத்தில் முடிந்து விடும்.

**ஜோதி! உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் இந்த சூழ்நிலை மாறும். யோசேப்பு என்ற வாலிபனின் வாழ்க்கையிலும் இதுப் போன்று பல வேதனையான சூழல் உருவானது. அவன் பொறுமையாகவும், பரிசுத்தமாகவும் இருந்ததால் அவனை தேசத்தின் இராஜாவாக இயேசு உயர்த்தினார். உங்கள் வாழ்க்கையிலும் நீங்கள் பொறுமை யோடும் பரிசுத்தத்தோடும் இருக்கும்போது, இயேசு உங்கள் சூழ்நிலையை மாற்றி, இலட்சியத்தை அடைய உதவி செய்வார். இலட்சியம் சாத்தியமாகும்!** ■

# இலக்கு

முகப்பு செய்தி: சதீஷ்




பள்ளிப் படிப்பையோ அல்லது கல்லூரி படிப்பையோ முடித்து விட்டு அடுத்து என்ன செய்ய போகிறோம் என்று குழப்பமான சூழ்நிலையில் நீங்கள் இருக்கலாம். இல்லை, சிறு வயது முதல் பெரும் இலக்குடன் இருந்த உங்களுக்கு என்னுடைய இலக்கை அடைவேனா? இல்லை மாட்டேனா என்று யோசித்து, யோசித்து சோர்ந்து போய் இருக்கலாம். சோர்ந்து போகாமல் இருங்கள். "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி. 4:14) என்று இயேசு கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையாய் இருந்து உங்கள் இலக்கை நோக்கி ஓடுங்கள். அவர் உங்கள் காரியங்களை வாய்க்க செய்வார்.

இன்றைக்கு வாலிபர்கள் பெரும் இலட்சியத்துடன் தங்களுடைய ஓட்டத்தை ஆரம்பிக்கிறார்கள். ஆனால் ஒரு சிலர் மட்டுமே தன்னுடைய இலக்கை அடைகிறார்கள். பெரும்பாலானோரால் அடைய முடியவில்லை. காரணம் அவர்கள் தன்னுடைய இலக்கை நோக்கி ஓட ஆரம்பிக்கும் போது இருந்த அதே உற்சாகமும், மன உறுதியும் நம்பிக்கையும் தடைகள் வரும் போது இருப்பதில்லை. பொதுவாக நாம் நம்முடைய இலக்கை நோக்கி ஓடும் போது குடும்ப சூழ்நிலை, பண நெருக்கடி, மனிதர்களின் ஏளனமான பேச்சுகள், பயம், தாழ்வுமனப்பான்மை என்று பலத்தடைகள் வரும். ஆனால் நம்முடைய கவனம் நாம் எடுத்த இலக்கின் மீதுதான் இருக்க வேண்டுமே தவிர, தடைகள் மீது இருக்க கூடாது. தடைகளை நினைத்து சோர்ந்து போனால் நம்முடைய இலக்கை அடைய முடியாது. தடகளத்தில் ஓடும் தடகள வீரர்கள் பல தடைகளைத் தாண்டி ஓடும் போதுதான் தங்களுடைய வெற்றி என்னும் இலக்கை அடைகிறார்கள். தடகளம் ஆனாலும் சரி, வாழ்க்கையில் வரும் தடைகள் ஆனாலும் சரி, அவற்றைத் தாண்டி வெற்றி பெற்றவர்தான் தனலட்சுமி. இவருடைய சொந்த ஊர் திருச்சி சிறு வயதிலேயே தன்னுடைய தகப்பனை இழந்த இவருக்கு தன் தாயாரின் வாரக்கூலி மட்டுமே இவருடைய குடும்ப வருமானம். மிகவும் ஏழ்மையான சூழ்நிலையில் இருந்த தனலட்சுமிக்கு அவர்களுடைய



13ம் வயதிலிருந்து தடகள வீராங்கனை ஆக வேண்டும் என்று தன்னுடைய இலக்கை நோக்கி ஓட ஆரம்பிக்கிறார். குடும்பத்தில் இருக்கும் வறுமை, பண நெருக்கடி இவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் தன்னுடைய கடுமையான உழைப்பு, விடாமுயற்சியால் இன்று இந்தியாவில் மிகவும் பிரபலமான தடகள வீராங்கனையாக பேசப்பட்டு வருகிறார். காரணம், கடந்த ஆண்டு இந்தியாவில் மாநிலங்களுக்கிடையில் நடைபெற்ற தடகள போட்டியில் பங்குபெற்ற தனலட்சுமி தன்னுடன் ஓடப்போகும் ஹிமாதாஸ் மற்றும் துத்தி சந்த் போன்ற பிரபலமான தடகள வீரர்களைக் கண்டு மனம் சோர்ந்து போகாமல் வெற்றி மட்டுமே என்னுடைய இலக்கு என்று 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் ஓடியதால் முன்னணி வீரர்களை பின்னுக்குத் தள்ளி தனலட்சுமி வெற்றி பெற்றார். அதுமட்டுமின்றி 200 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் 23 ஆண்டு கால சாதனையாளராக இருந்த P.T. உஷாவின் (23.305) சாதனையை தனலட்சுமி (23.26) முறியடித்து இந்தியாவே இவரை திரும்பி பார்க்கும்படி செய்தார். மன உறுதியும், கடுமையான உழைப்பும் முயற்சியும் இருந்தால், நம்முடைய இலக்கை எளிதில் அடைந்து விடலாம் என்பதற்கு இவரே சரியான உதாரணம்.







உங்கள் வாழ்க்கையில் கூட இலக்கை நோக்கி போகும்போது எரிகோ போன்ற பல தடைகள் இருக்கலாம். அதை எல்லாம் பார்த்து நீங்கள் சோர்ந்து போய் முடங்கி விடக்கூடாது. எத்தனை தடைகள் வந்தாலும் நீங்கள் தடைகளை பார்க்காமல், உங்களுடைய இலக்கை நோக்கி ஓடினால்தான் வெற்றி பெற முடியும். இலக்கை அடைய முடியும். அதற்கு உங்களுக்கு விசுவாசமும் பொறுமையும் மிகவும் அவசியம். ஏனென்றால், ''...விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும்...'' (மாற்கு 9:23). தன்னுடைய 17ம் வயதில் கனவு காண ஆரம்பித்த யோசேப்பின் வாழ்க்கையில் எல்லாமே நேர் எதிர்மறையாக இருந்தது. தன்னுடைய கனவை நோக்கி போகும் போது, அவன் வீட்டாரே அவனை எதிர்த்தார்கள். யாரும் யோசேப்பை புரிந்து கொள்ளவில்லை. பின்பு எகிப்தில் அடிமையாக விற்கப்பட்ட அவனுக்கு போத்திபாரின் வீட்டில் அவமானம், நிந்தை ஏற்பட்டு கடைசியாக யோசேப்பு சிறைச்சாலைக்கு கொண்டு போகப்பட்டான். இப்படிப்பட்ட கடுமையான சூழ்நிலையில் யோசேப்பு போனாலும் அவனுடைய விசுவாசத்தை அவன் கைவிடவில்லை. என்றைக் காவது ஒருநாள் என் கனவை என் ஆண்டவர் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையுடன் இருந்தான். அதுமட்டுமின்றி 13 வருடம் தன் கனவு நிறைவேற பொறுமையுடன் காத்து இருந்தான். வரும் பாடுகளை சகித்தான். யோசேப்பு விசுவாசத்துடனும் பொறுமையுடனும் இருந்தால்தான் தன்னுடைய இலக்கை அடைய முடிந்தது.

**எனக்கன்பான வாலிபர்களே! உங்கள் இலக்கை நோக்கி நீங்கள் போகும் போது நெருக்கங்கள் வரத்தான் செய்யும், பாடுகள், நிந்தைகள் எல்லாம் வரும். ஆனால் இவற்றை எல்லாம் பார்த்து நீங்கள் உங்கள் இலக்கை நோக்கி ஓடுவதை நிறுத்திவிட்டால் நஷ்டம் உங்களுக்குத்தான், உங்கள் வாழ்க்கையில் வரும் சோதனைகளைத் தாண்டி, நீங்கள் சாதனை புரிய வேண்டுமானால், "பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடர்ந்து ஓடுங்கள்" (பிலிப்பியர் 3:13,14), இலக்கை அடைவீர்கள் ■**



# விசுவாசம் எங்கே?



செய்தி: மோகன் சி.லாசரஸ்

**"பின்பு ஒருநாள் அவர் தமது சீஷரோடுங்கூடப் படவில் ஏறி: கடலின் அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார்; அப்படியே புறப்பட்டுப் போனார்கள். படவு ஓடுகையில் அவர் நித்திரையாயிருந்தார். அப்பொழுது கடலிலே சுழல்காற்று உண்டானதால், அவர்கள் மோசமடையத்தக்கதாய்ப் படவு ஜலத்தினால் நிறைந்தது. அவர்கள் அவரிடத்தில் வந்து, ஐயரே, ஐயரே, மடிந்துபோகிறோம் என்று அவரை (இயேசுவை) எழுப்பினார்கள்; அவர் எழுந்து, காற்றையும் ஜலத்தின் கொந்தளிப்பையும் அதட்டினார்; உடனே அவைகள் நின்றுபோய், அமைதலுண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி: உங்கள் விசுவாசம் எங்கே என்றார். அவர்கள் பயந்து ஆச்சரியப்பட்டு: இவர் யாரோ, காற்றுக்கும் ஜலத்துக்கும் கட்டளையிடுகிறார், அவைகளும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்"** (லூக்கா 8:22-25).

இயேசு தன் சீஷர்களை நோக்கி, அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்று சொன்னவுடனே, அந்த படவில் பிரயாணப்படுகிறார்கள். படவு போய் சேர்வதற்கு சில மணி நேரங்கள் ஆகும். எனவே படகு பிரயாணப்பட்டவுடனே இயேசு களைப்படைந்தவராய், அவர் நித்திரை செய்ய ஆரம்பித்துவிட்டார். ஏனென்றால், அவர் அதிகாலையில் எழும்பி ஜெபம் செய்கிறார், மாலையில் ஜெபிக்கிறார், தினந்தோறும் மக்கள் மத்தியில் சென்று ஊழியம் செய்து, அற்புதங்களை செய்து அவர் களைப்படைந்ததினால், இந்த மாதிரி பிரயாணத்தில்தான் அவருடைய நித்திரை காணப் பட்டது. இயேசு நித்திரை செய்த நேரத்தில் சுழல் காற்று உண்டாகி, படகு அமிழத்தக்கதாக தண்ணீர் படவுக்குள்ளே வர ஆரம்பித்து விட்டது. படவில் இருந்த சீஷர்கள் எவ்வளவோ பிரயாசப்படுகிறார்கள். ஆனால் அவர்களால் முடியாது என்ற சூழ்நிலை வந்த போது இயேசுவை எழுப்பினார்கள். இயேசு எழுந்து காற்றையும், கடலையும் பார்த்து இரையாதே அமைதியாயிரு என்று சொன்னவுடன் காற்றும், கடலும் அமைதியாகி விட்டது. காற்றையும் கடலையும் அதட்ட அமைதியாகிறதே என்று எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.



இப்போது சீஷர்களைப் பார்த்து இயேசு, உங்கள் விசுவாசம் எங்கே? ஏன் பயந்தீர்கள்? ஏன் அமிழ்ந்து போகிறோம் என்று அலறினீர்கள்? ஏன் நீங்கள் கலங்கினீர்கள்? என்று கேட்டார். அதற்கு சீஷர்கள், பெரிய சுழல் காற்று வீசியது, கடல் கொந்தளித்தது, படவுக்குள் தண்ணீர் வந்து விட்டது, அதனால் நாங்கள் அமிழ்ந்து விடுவோமோ என்று பயந்து விட்டோம் என்றார்கள். இன்றைக்கு உங்களுடைய வாழ்க்கையில் கடன் பிரச்சனை என்கிற காற்று, வியாதி என்கிற சுழல் காற்று, திருமண பிரச்சனை என்கிற காற்று, குழந்தை இல்லை என்கிற காற்று, வறுமை என்கிற பெரும் காற்று மோதிக் கொண்டிருக்கிறது. மனிதரால் வரக்கூடிய

பிரச்சனைகள், பிசாசினால் வரக்கூடிய போராட்டங்கள், இப்படி பல காரியங்கள் உங்கள் வாழ்க்கைப் படகை மோதி, மோதி அமிழ்த்து விடுமோ என்று பயந்து கலக்கத்தோடு காணப்படுகிறீர்களா? உங்கள் விசுவாசம் எங்கே? என்று கர்த்தர் கேட்கிறார். என்ன போராட்டம் வந்தாலும், எத்தனை சுழல் காற்று வந்தாலும், எத்தனை கொந்தளிப்பு வந்தாலும், நீங்கள் விசுவாசமாக இருந்தால் தாண்டி அக்கரைக்கு சேர முடியும். பாதியில் நீங்கள் அமிழ்ந்து போக மாட்டீர்கள். அதற்கு தேவன் விசுவாசத்தை எதிர்பார்க்கிறார்.



என் ஊழியத்தின் ஆரம்ப நாட்களில், எங்கள் ஊருக்கு பக்கத்து ஊர் நாசரேத் அருகில் இருக்கிற ஒரு கிராமத்திற்கு போயிருந்தேன். அங்கிருந்த சபை உபதேசியார், பக்கத்தில் கஷ்டபடுகிற ஒரு குடும்பத்திற்காக போய் ஜெபித்து விட்டு வரலாமா என்று கேட்டார். உபதேசியாரும் நானும் சென்ற போது, அந்த வீட்டில் ஒரு தாயாரும், அவர்கள் மருமகள் மடியில் ஒரு கைக் குழந்தையை வைத்துக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் முகம் துக்கமாக, சோகமாக இருந்தது. முக்கியமாக அந்த சகோதரி மிகவும் துக்கமாக இருந்தார்கள். அப்போது, ஆவியானவர் அவர்களோடு பேசும்படி என்னை வழிநடத்தினார்.

உங்கள் குடும்பத்தில் உங்கள் மனதை பாதிக்கிற ஒரு துக்கம் இருக்கிறது, எதுவானாலும் சொல்லுங்கள் அதற்காக நாம் ஜெபிக்கலாம் என்று சொன்னேன். அந்த சகோதரி குனிந்து அழுதுக் கொண்டிருந்தார்கள். அந்த தாயார் பேச ஆரம்பித்தார்கள். ஐயா! இவள் என்னுடைய மருமகள், என் மகன் கிடைக்கிற சின்ன கூலி வேலை செய்கிறான். ஏற்கனவே இரண்டு குழந்தைகள் இருக்கிறது, இது மூன்றாவது குழந்தை. ஏற்கெனவே இருக்கிற இரண்டு குழந்தைகளுக்கும் சரியான சாப்பாடு கொடுக்க



முடியாமல், நாங்கள் வறுமையில் கஷ்டப்படுகிறோம். என் மகன் வேலை செய்து கொண்டு வருகிற பணத்தை வைத்து ஏதோ வாழ்க்கை நடத்துகிறோம். இந்த கஷ்டத்திற்கு மத்தியில் மூன்றாவது குழந்தையை எப்படி வளர்க்கப் போகிறோம்? யாருக்காவது இந்த குழந்தையை கொடுத்துவிடலாமா என்று நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். வேதப்புத்தகம் வைத்திருக்கிறீர்கள், இயேசுவை விசுவாசிக்கிறேன் என்று சொல்கிறீர்கள், உங்கள் விசுவாசம் எங்கே? என்று நான் அவர்களிடம் கேட்டேன். காகத்தை கவனித்துப் பார், அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியத்தில் சேர்த்து வைக்கிறதுமில்லை. அதையே நான் போஷிக்கிறேனே உன்னை போஷிக்க மாட்டேனா! காட்டு புஷ்பத்தை கவனித்துப் பார், அவைகள் காலையில் பூக்கிறது மாலையில் வாடிப் போய் விடுகிறது. அதையே நான் அழகாக உடுத்துவிக்கிறேன், உன்னை உடுத்துவிக்க மாட்டேனா! நாளைய தினத்தைக் குறித்து கவலைப்படாதே என்று இயேசு நம்முடைய அனுதின தேவைக்காக எவ்வளவு அருமையான காரியத்தை சொல்லி எழுதி வைத்திருக்கிறார். நீங்கள் அவரை விசுவாசிக்கவில்லையா? அவருடைய வசனத்தை விசுவாசிக்கவில்லையா? இந்த குழந்தையைக் கொடுத்த ஆண்டவர், அந்த குழந்தையைப் போஷிக்க, உடுத்துவிப்பதற்கான ஆசீர்வாதத்தை தருவார் என்று நீங்கள் நம்பக்கூடாதா? என்று கேட்டதும் அந்த தாயார் அமைதியாய் அழுதார்கள். முப்பது லட்சம் பேருக்கு ஆகாரம் கொடுத்து, வனாந்தரத்திலே நாற்பது வருஷம் குறைவில்லாமல் நடத்தின ஆண்டவர் அவர். மூன்றாவது குழந்தை பிறந்தால் என்னால் காப்பாற்ற முடியாது. ஏதோ இரண்டு குழந்தை என்றால் உடைகள் தரமுடியும், சாப்பாடு தரமுடியும், மூன்றாவது குழந்தையா இதற்கு மேல் என்னால் காப்பாற்ற முடியாது

பரலோகத்தில் பணம் இல்லை என்று ஆண்டவர் சொல்வாரா? ஆண்டவர் மேல் என்ன விசுவாசம் வைத்திருக்கிறோம்? உங்களை போஷிக்கிறவர்,உங்களை உடுத்துவிக்கிறவர், உங்களுடைய தேவைகளை சந்திக்கிறவர், உங்கள் மேல் அக்கரையுள்ள ஒரு தேவன் உங்கள் தலையின் மயிரைக்கூட எண்ணி வைத்திருக்கிற கரிசனையுள்ள தகப்பன் உங்களுக்கு இல்லையா? எங்கே போனது உங்கள் விசுவாசம்? நான் உனக்கு ஒரு வேலை தர முடியாதா? நான் உனக்கு ஒரு தொழில் தர முடியாதா? நான் உன் பிள்ளைகளை படிக்க வைக்க முடியாதா? நான் உன் பிள்ளைகளை போஷிக்க முடியாதா? நான் உன் ஊழியத்தின் தேவைகளை சந்திக்க முடியாதா? எல்லாம் என்னால் முடியும். உன் அவிசுவாசத்தினால் தான் நீ பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறாய். நீ சந்தேகப்பட்டு, என்னைத் தேடாமல் சூழ்நிலையைப் பார்க்கிறதினால் தான் நீ பயந்து அமிழ்ந்து கொண்டிருக்கிற சூழ்நிலையில் இருக்கிறாய் என்று ஆண்டவர் சொல்கிறார். நான் உம்மையே விசுவாசிக்கிறேன் என்று சொல்லிப் பாருங்கள், கர்த்தர் உங்களை வழிநடத்தும் விதமே வித்தியாசமாக இருக்கும்.



1974ம் வருடம் ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்த போது, ஆண்டவரே நான் வேதப்புத்தகத்தை மட்டும் எடுத்துக் கொண்டு ஊழியத்திற்கு வருவேன், எனக்கு ஐந்து பைசா வேண்டுமானாலும் என் அப்பா, அம்மாவிடம் கேட்க மாட்டேன், எந்த மனுஷரையும் நான் கேட்க மாட்டேன், என்னுடைய சாப்பாட்டுக்கு, என்னுடைய உடைக்கு, என்னுடைய தேவைக்கு நான் யாரிடமும் போய் நிற்க மாட்டேன், நீங்கள் தான் எனக்கு பொறுப்பு என்று சொன்னேன். கர்த்தர் என்னைப் பார்த்து, நாளைய தினத்தைக் குறித்து நீ கவலைப்படாதே, அன்றன்றைக்கு உன் தேவைகளை நான் சந்திப்பேன், உன்னை போஷிப்பேன், நான் உன்னை உடுத்துவிப்பேன், உன் தேவைகளை சந்திப்பேன். நீ எந்த மனுஷரிடத்திலும் போய் கை ஏந்த வேண்டியது வராது. நான் நடத்துவேன் என்று சொன்னார். நான் உம்மை விசுவாசிக்கிறேன் ஆண்டவரே என்று சொல்லி ஊழியத்திற்கு என்னை ஒப்புக்கொடுத்தேன். எங்கள் வீட்டில் அப்பா, அம்மா வசதி படைத்தவர்கள், ஆனால் நான் என்றைக்கு ஊழியத்தில் கால் வைத்தேனோ, என் பெற்றோரிடம் ஐந்து பைசா நான் கேட்டதும் இல்லை. நான் வாங்கினதும் கிடையாது, நான் மனிதர்களை நம்பி வரவில்லை. மனுஷனுடைய காணிக்கைகளை நம்பி வரவில்லை. இயேசு, என் எஜமான், என்னுடைய தகப்பன், எனக்கு எல்லாமாக இருக்கிறவர், அவருடைய வார்த்தையை நம்பி தான் வந்தேன். இன்றைக்கு வரைக்கும் என்னை அவர் வெட்கப்பட விடவில்லை. யாரிடமும் போய் கையேந்தி நிற்கும்படி கர்த்தர் விடவில்லை. 1974ம் வருடத்திலிருந்து இத்தனை வருட காலங்கள் எனக்கு போதுமானவராக இருக்கிறார். ஏனென்றால் அவர் என்னோடுகூட இருக்கிறார்.

உங்கள் வாழ்க்கை படகில் இயேசு உங்களோடு இருந்தால் ஏன் நீங்கள் பயந்து கலங்கி நிற்க வேண்டும். கர்த்தர் மேல் உங்கள் விசுவாசம் இருந்தால், எவ்வளவு சந்தோஷமாக இருக்கும். நானும் உங்களோடு கூட படகில் இருக்கிறேன், நீங்கள் அமிழ்ந்து போனால் நானும் தான் அமிழ்ந்து போவேன், எங்கே உங்கள் விசுவாசம்? என்று கேட்கிறார். ஒருநாளும் நான் உம்மை சந்தேகப்படமாட்டேன், விசுவாசிப்பேன் என்று ஒப்புக்கொடுங்கள்.

**அன்பான வாலிபர்களே! சுழல் காற்று போன்ற பிரச்சனைகள் உங்களை மோதி அடிக்கிறதா? விசுவாசத்தோடு எல்லா பிரச்சனைகளையும் இயேசுவிடம் விட்டு விடுங்கள். கர்த்தர் உங்களை மூழ்கிப் போகவிடமாட்டார். அவர் உங்கள் விசுவாசத்தை பார்த்துதான் அற்புதம் செய்வார். விசுவாசியுங்கள்! ■**



புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

**கீழே வேதத்தில் உள்ள கதாபாத்திரங்களின் பெயர்களும்,
அவர்களின் சொந்த ஊரும் மாறி, மாறிக் கொடுக்கப்பட்டுள்ளன.
அவைகள் சரியாக இணைத்து விடையை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.**

| கதா பாத்திரங்கள் | சொந்த ஊர் |
|---|---|
| 1. எலியா | ஆனதோத் |
| 2. சவுல் | மொரேசா |
| 3. எரேமியா தீர்க்கதரிசி | எரிகோ |
| 4. ஆமோஸ் தீர்க்கதரிசி | திஸ்பியா |
| 5. மீகா தீர்க்கதரிசி | பெத்தானியா |
| 6. நாகூம் | கானா |
| 7. நாகமான் | கிபியா |
| 8. சகேயு | சீரியா |
| 9. பிலிப்பு | செசரியா |
| 10. லாசரு | தெக்கோவா |
| 11. நாத்தான்வேல் | பெத்சாயிதா |
| 12. கொர்நெலியு | எல்கோஸ் |





பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள்

## 15.06.2022

### கடந்த மாத விடைகள்

1. ஆகூர். 2. அந்திப்பா. 3. ஏசா. 4. மோசே. 5. எலியா.
6. கேயாசி. 7. சிம்சோன். 8. ஓர்பாள். 9. லாசரு. 10. யோபு

கடந்த மாத வெற்றியாளர்

**சகோதரி பவானி**
திருப்பூர் அவர்களை
வாழ்த்துகிறோம்



# ஸ்டீபன்சனின் விடாமுயற்சி

சாதனை: சுமா



தங்களுடைய இலக்கை அடைய மிக விரைவாக செயல்பட்டு கொண்டிருக்கும் இளம் சாதனை வீரர்களுக்கு எங்களுடைய வாழ்த்துக்கள். சின்ன சின்ன வாய்ப்புகள் எந்த நேரத்திலும், எந்தவொரு சமயத்திலும் உங்களைத் தேடி வரலாம். கிடைத்த வாய்ப்புகள் மிக சிறியது என்று எண்ணி அதை ஒதுக்கி விட்டு பெரிய பெரிய வாய்ப்புகளுக்காக காத்திருக்கும் யாவரும், சாதனை என்ற வார்த்தையை மட்டுமே சொல்ல முடியுமே தவிர, அந்த வெற்றியை ருசித்துப் பார்க்க முடியாது. கிடைக்கும் வாய்ப்புகள் சிறியது அல்லது பெரியது என்பது முக்கியமல்ல, செயல்படுத்தும் நம்முடைய திறன் தான் பெரியது. எனவே எந்தவொரு வாய்ப்புகள் கிடைத்தாலும் பயன்படுத்துங்கள். பிறகு வெற்றிக் கனியை சுவைக்கலாம். தன்னுடைய வாய்ப்பை சரியாக பயன்படுத்தி வெற்றிக்கண்ட ஒரு சாதனையாளரின் வாழ்க்கை உங்கள் பார்வைக்கு!!!

சீன் ஸ்டீபன்சன் (Sean Stephenson) மே 5, 1979ம் ஆண்டு சிகாகோவில் (Chicago) பிறந்தார். இவர் பிறக்கும் போது எல்லா குழந்தைகளைப் போல பிறக்கவில்லை. இவர் பிறந்தபோது இவருடைய குடும்பம் மகிழ்ச்சியுடன் இவரை இந்த உலகத்திற்கு வரவேற்கவில்லை. ஸ்டீபன்சன் பிறக்கும் போது ''உடையக்கூடிய எலும்பு நோய்'' என்று அழைக்கப்படும் Osteogenesis Imperfecta என்ற நோய் தாக்கப்பட்டு இருந்தார்.



இவருடைய எலும்புகளை தொட்டாலே உடையக்கூடிய நிலைமையில் இருந்தது. இவர் பிறக்கும் போது இவருடைய இரண்டு கால்களும் உடைந்து விட்டது. இவரை பரிசோதித்த மருத்துவர்கள் இன்னும் 48 மணி நேரத்தில் இவர் இறந்து விடுவார் என்ற அதிர்ச்சியான தகவலை ஸ்டீபன்சனின் பெற்றோரிடம் தெரிவித்தனர். ஆனால் அதிர்ஷ்டவசமாக ஸ்டீபன்சன் இறக்கவில்லை. மெல்ல மெல்ல நாட்கள் நகர்ந்தது. ஸ்டீபன்சன் தன்னுடைய வீட்டிற்கு அருகாமையில் உள்ள ஒரு பள்ளியில் சேர்க்கப்பட்டார். பள்ளியில் எந்தவொரு மாணவனும் இவருடன் நட்பு கொள்ளத் தயாராக இல்லை. இவர் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் போது, இவருடைய கால்கள் கதவிற்கு இடையில் மாட்டி காயத்தை ஏற்படுத்தியது. இந்த காயம் காரணமாக சிறிது நாட்கள் இவர் பள்ளிக்குச் செல்லவில்லை. காயத்தில் இருந்து மீண்டு வந்த ஸ்டீபன்சன் பள்ளிக்கு சென்ற போது, இவரது ஆசிரியை அழைத்து உன்னுடைய நோய் பற்றியும், தற்போது ஏற்பட்ட காயத்தில் இருந்தும் எப்படி மீண்டு வந்தாய் என்று ஒரு உரையாடலை மாணவர்கள் முன்பாக கூற சொன்னார். ஸ்டீபன்சன் தனக்கு கிடைத்த வாய்ப்பை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு மிகத் தெளிவாக தன்னுடைய உரையாடலைத் தொடர்ந்தார். இவருடைய உரையாடலைக் கேட்ட அனைத்து மாணவர்களும் உற்சாகத்துடன் கைத்தட்டல் களை இவருக்கு பரிசாக தந்தனர்.

இவருடைய 17ம் வயதில் மிகப் பெரிய மேடையில் Motivational Speech கொடுக்கும் வாய்ப்புத் தேடி வந்தது.



இவருடைய பேச்சைக் கேட்ட அனைவரும் உற்சாகமடைந்து தங்களுடைய கைத் தட்டல்களை இவருக்குப் பரிசாகத் தந்தனர். இவர்களுடைய கைத் தட்டல்கள் ஸ்டீபன்சனை இன்னும் உற்சாகப்படுத்தியது. இதன் பிறகு Motivational Speech கொடுக்கிறதையே நம்முடைய Career ஆக்கினால் என்ன என்று சிந்திக்கத் தொடங்கினார். சிந்திக்கிறது மட்டுமல்லாமல் செயல்படுத்தவும் தொடங்கினார். Make a Wish என்ற Foundation உடன் இணைந்து பல இடங்களுக்குச் சென்று Motivational Speech கொடுக்கிறார். இவருக்கு வயதாக வயதாக அநேக எலும்பு முறிவுகள் இவருடைய உடம்பில் ஏற்பட்டது. 18 வயதிற்கு உள்ளாக இவருக்கு 200க்கும் மேற்பட்ட எலும்பு முறிவுகள் ஏற்பட்டது. இதனால் இவருக்கு Chipsயை கூட கடித்து சாப்பிட முடியாத சூழ்நிலை உருவானது. காரில் பயணம் செய்யும் போது இவருக்கென்று தனி Seatல் அமர்ந்து தான் பயணம் செய்வார். ஸ்டீபன்சன் நிலமையைக் கண்ட இவருடைய தாயார், ஏன் நீ இவ்வளவு கஷ்டப்படுகிறாய்? என்று அவரிடம் கேட்டார். அதற்கு ஸ்டீபன்சன் 48 மணி நேரம் மட்டுமே உன்னால் உயிர் வாழ முடியும் என்று அன்று சொல்லிய மருத்துவர்கள் முன் இன்று 22 ஆண்டுகளாக உயிருடன் இருக்கின்றேன், இதுவே பெரிய சாதனை தானே அம்மா என்று கூறினார்.

1998ல் ஸ்டீபன்சன் Tony Robinson என்ற மிகப்பெரிய Motivational Speakerயை சந்திக்கிறார். ராபின்சன் ஸ்டீபன்சனிடம், நீ நன்றாக பேசுகிறாய், ஆனால் நீ மக்களின் மன நிலையையும் அவர்கள் ஆர்வத்தையும் புரிந்துக் கொண்டு அவர்களுக்கு Motivational Speech கொடுக்க வேண்டும் என்று கூறி ஸ்டீபன்சனை ஊக்குவித்தார். இதனால் ஸ்டீபன்சன் தன்னை மேம்படுத்த Political Scienceயை எடுத்து படித்து பட்டம் பெற்றார். படித்துக் கொண்டே இருக்கும்போது, ஜனாதிபதி பில் கிளிண்டன் உடன் இணைந்து செயல்படும் வாய்ப்பு கிடைத்தது. இதன் பிறகு ஸ்டீபன்சன் 2001ல் ஒரு புத்தகம் ஒன்றை எழுதி அதை வெளியிட்டார். அந்த புத்தகத்தின் பெயர் How Youth can Succeed. இந்த புத்தகம் இளைஞர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. மீண்டும் படிக்க விரும்பிய ஸ்டீபன்சன் Bennett Universityல் Therapistஆக பட்டம் பெற்றார். படிப்பின் மேல் உள்ள ஆர்வத்தால் மீண்டும் Neuro - Linguistic என்ற படிப்பைப் படித்தார். இவர் படித்த Pacific University.. Therapistஆக பணிபுரியும் வாய்ப்பு கிடைத்து, அங்கே அதிக சம்பளத்துடன் பணிபுரியத் தொடங்கினார்.

அநேகப் பள்ளி கல்லூரிகளில் இவரை Motivational Speech கொடுக்க அழைக்கப்பட்டார். இவருக்கு 15 ஆயிரம் முதல் 30 ஆயிரம் டாலர் வரை ஒரு மணி நேரத்திற்கு கொடுக்கப்பட்டது. இவருடைய Speech அநேகரை உற்சாகப்படுத்தியது. ஸ்டீபன்சனுக்கு நீண்ட நாட்களாக ஒரு கனவு இருந்தது. நமக்கு நல்ல பெற்றோர்கள் கிடைத்து விட்டார்கள். ஆனால் எத்தனையோ மாற்றுத் திறனாளிகள், பெற்றோர்கள் இல்லாமல் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே ஒரு Orphanage தொடங்க முடிவு செய்து, Orphanageயை தொடங்கி அநேக குழந்தைகளுக்கு நல்ல வாழ்க்கையைத் தந்தார்.

**ஸ்டீபன்சனிடம் நீங்கள் எப்படி சாதனையாளராக மாறினீர்கள் என்று கேட்டதற்கு, அவர் சொன்ன மூன்று காரியங்கள்,**

1. Hack Your Emotions (உங்கள் உணர்வுகளை ஊடுருவுங்கள்)
2. Create A Vision for your life (உங்கள் வாழ்க்கைக்கான ஒரு பார்வையை உருவாக்குங்கள்)
3. Have a fun with your life (உங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருங்கள்)

இந்த மூன்று காரியங்கள் மட்டும் நீங்கள் கடைப்பிடித்தால் நீங்களும் வெற்றிக் காணலாம். ஏதாவது பிரச்சனை உங்கள் வாழ்க்கையில் வரும்போது என்னுடைய படத்தைப் பாருங்கள், இவ்வளவு பெரிய கஷ்டங்களுடன் என்னால் சாதனை புரிய முடியுமானால், உங்களால் ஏன் முடியாது? என்று கூறினார்.

**ஆமாம் நண்பர்களே, நம்முடைய வாழ்க்கையில் இலக்கு வைக்கப்பட்டுள்ளது. இலக்கை அடைய நாம் தொடர்ந்து போராட வேண்டும். நமக்கு கிடைக்கும் அனைத்து வாய்ப்புகளையும் சரியான நேரத்தில் சரியாக பயன்படுத்த வேண்டும். அப்படி நாம் செய்தால் வெற்றி நிச்சயம். நாமும் அநேகர் கண்டு வியக்கும் சாதனையாளர்களே!!!** ■

# எழுப்புதலை பற்ற வைப்போர் முகாம் 2022 – கேரளா

நாலுமாவடி தேவனுடைய கூடாரத்தில் வைத்து கடந்த ஏப்ரல் மாதம் 19,20,21 தேதிகளில் கேரளா மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிருந்தும் சுமார் 617 வாலிபர்கள் எழுப்புதலை பற்ற வைப்போர் முகாமில் கலந்து கொண்டார்கள். இதில் சகோ. மோகன் சி. லாசரஸ் சகோ. வின்சென்ட் செல்வகுமார் அவர்கள் ஆண்டவருடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டு, எழுப்புதலை குறித்த தரிசனத்தையும், எழுப்புதலில் வாலிபர்களின் பங்கு எவ்வளவு முக்கியம் என்பதையும் தெளிவாக எடுத்து சொல்லி, வந்திருந்த வாலிபர்கள் எழுப்புதலின் அக்கினியை கேரளா மாநிலத்திற்கு சுமந்து சென்றிருக்கிறார்கள். சகோ. ராஜேஷ் அவர்கள் பாடல் ஆராதனை வேளையைப் பொறுப்பெடுத்து நடத்தினார்கள். சகோ. ஜான் மில்லர் மற்றும் பாஸ்டர் எபினேசர் ஆகியோர் தேவ செய்திகளை மலையாளத்தில் மொழிப் பெயர்த்தார்கள்.












Jesus

Jesus

Jesus










எழுப்புதல் செய்தி: சதீஷ்



# நீதித்துறையில் எழுப்புதல்

நம் இந்திய தேசத்தில் சமாதானமும் சந்தோஷமும் பெருகி தேசம் செழிப்படைய வேண்டுமானால், நீதித்துறையில் கட்டாயம் எழுப்புதல் வர வேண்டும். ஏனென்றால், தேசத்தை ஆளுகை செய்கின்ற அரசாங்கத்தையே கேள்வி கேட்கிற அதிகாரம் பெற்ற ஒரே துறை நீதித்துறை. எனவே நீதித்துறையில் எழுப்புதல் வரும்போது நீதிபதிகளும், வழக் கறிஞர்களும் நேர்மையாக செயல்பட துவங்குவார்கள். குற்றங்கள் இல்லாத ஒரு சமுதாயம் தேசத்தில் ஏற்படும். அன்றைக்கு இஸ்ரவேல் ஜனங்கள் பொல்லாப்பானதை செய்து நீதி தவறிய போது ஆண்டவர் கிதியோன், தெபொராள் போன்ற நியாயாதிபதிகளை எழும்பி நியாயம் விசாரிக்க செய்து தனது ஜனங்களை சரி செய்தது போல இன்றைக்கும் தேசத்தில் நடக்கும் அநீதிகள், அக்கிரமங்கள், பொல்லாப் பான காரியங்கள் மாற நீதியுள்ள நியாயாதிபதிகள் எழும்ப வேண்டியது அவசியமாய் இருக்கிறது. ஏனெனில் இந்தியாவில் இன்றைக்கு நீதித்துறையால் விசாரிக்கப்பட வேண்டிய நிலுவை வழக்குகள் மட்டும் 4.7 கோடி உள்ளது. இதுமட்டுமின்றி 1,82,000 வழக்குகள் கடந்த 30 ஆண்டுகளாக விசாரிக்கப்படாமல் நிலுவையிலுள்ளது.





இதனாலேயே தேசத்தில் குற்றம் செய்வோரின் எண்ணிக்கை அதிகமாகி குற்றங்கள் தடுக்கப்படாமல் போய் விடுகிறது. அநேக குற்றவாளிகள் குற்றம் செய்தும் சரியான தண்டனை கிடைப்பதற்கு கால தாமதம் ஆவதால் தைரியமாக குற்றங்களை செய்து வருகின்றனர். இந்த நிலைமை தேசத்தில் மாற வேண்டுமானால், கிதியோன் மற்றும் தெபொராளைப் போன்ற நீதியுள்ள நியாயாதிபதிகள் நீதித் துறையில் எழும்ப வேண்டும் என்று நீங்கள் ஜெபிக்க வேண்டும். நீங்கள் இடைவிடாமல் தொடர்ந்து நீதித் துறையின் எழுப்புதலுக்காக ஜெபித்தீர் களானால் நிச்சயம் நீதித்துறையில் எழுப்புதல் வரும்.

‘‘...தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள் ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப் பாரோ?’’ (லூக்கா 18:7). நிச்சயமாகவே உங்கள் ஜெபத்திற்கு பதில் செய்வார். எனவே தொடர்ந்து நீதித்துறையின் எழுப்புதலுக்காக ஜெபம் செய்யுங்கள்.

**நீதித்துறை பற்றிய விவரங்கள்**

1. உச்ச நீதிமன்றம் - 01
2. உயர் நீதிமன்றங்கள் - 25
3. மாவட்ட நீதிமன்றங்கள் - 672
4. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் - 32
5. உயர் நீதிமன்ற நீதிபதிகள் - 1079
6. வழக்கறிஞர்கள் - சுமார் 20 லட்சம்



எனக்கன்பான வாலிபர்களே! நீதி மன்றங்களின் மீது கர்த்தருடைய ஆளுகை வரும் போது கர்த்தருடைய நீதி தேசத்தில் வெளிப்படும். ‘‘ஒடுக்கப்படுகிற யாவருக்கும், கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார்’’ (சங்கீதம் 103:6). எழுப்புதலுக்காக தொடர்ந்து ஜெபித்து வருகிற நீங்கள் நீதித்துறையின் எழுப்புதலுக்காகவும் ஜெபிக்க மறந்து விடாதீர்கள். நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிற ஆண்டவர் நிச்சயம் உங்கள் ஜெபத்திற்கு பதில் தந்து நம் தேசத்தை சுத்திகரிப்பார்.

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்




சத்தியம் TV சனிக்கிழமை 6:30am
7am Youtube மற்றும் Comforter TV யிலும் பார்க்கலாம்

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.
அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட
ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!

9750955547



நிகழ்வு: கெத்சி கிளார்வின்



### வேதாகமத்தில் பறவைகள்

# காடை!

* காடை மிகச்சிறிய பறவை. சுமார் ஏழரை அங்குலம் தான் இருக்கும்.
* காடை, மிக வேகமாக பறக்கக்கூடியதும், துரிதமாக தரையில் ஓடக்கூடியதும் ஆகும்.
* காடைகளால் ரொம்ப தூரம் பறக்க முடியாது. குறிப்பிட்ட அளவுக்கு தான் பறக்கும்.
* காடைகள் மற்ற பறவைகள் போல தண்ணீரில் குளிக்காது, மண்ணில் குளிக்கும்.
* காடைகள் நேரத்தை தரையில் தான் செலவிடும்.
* காடைகள் ஒன்று அல்லது இரண்டு வாரங்களில் அவர்களது பெற்றோரை பின்தொடர ஆரம்பிக்கும்.
* மூன்றிலிருந்து 5 வருடங்கள் தான் உயிரோடு இருக்கும்.



**வேதத்தில் காடையைப் பற்றி என்ன சொல்கிறது என்று பார்க்கலாம்.**

வேதாகமத்தில், முதன் முதலில் யாத்திராகமம் 16:12,13-ல் இப்பறவையைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்ரவேல் மக்கள் கிப்ரோத் என்னும் பிரதேசத்தில் பாளயம் இறங்கினார்கள். அவர்களுக்கு இறைச்சி உண்ண வேண்டும் என்ற ஆவல் வந்ததால் மோசேயிடம் முறையிட்டார்கள். மன்னாவைத் தவிர உண்பதற்கு வேறொன்றும் இல்லையென்று இஸ்ரவேல் ஜனங்கள் முறுமுறுத்தார்கள். அப்பொழுது கர்த்தர் மோசேயிடம், ''கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதா? என் வார்த்தையின்படி நடக்குமோ நடக்காதோ என்று நீ இப்பொழுது காண்பாய் என்றார்''.



தேவனுடைய கட்டளையின்படி மேற்கிலிருந்து கடற்காற்று பலமாக வீசினது. லட்சக்கணக்கான காடைகள் காற்றில் அடித்து வந்து இஸ்ரவேலர் பாளையத்தைச் சுற்றி வீழ்ந்தன (எண். 11:31,32). 3 அடி உயரத்திற்கு காடைகள் குவியலாய் கிடந்தது. இவைகளைத்தான் அன்று இஸ்ரவேலர்கள் பிடித்து மனநிறைவாய் உண்டார்கள். பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பே, இஸ்ரவேலர்களின் தேவையை நிறைவு செய்த தேவன் இன்று உங்களின் தேவையை சந்தியாமல் போய்விடுவாரோ?

அன்பு வாலிபர்களே! வறண்ட நிலமாகிய வாழத்தகுதியற்ற சூழ்நிலைக்கொண்ட வனாந்திரப் பகுதியிலேயே அன்று இஸ்ரவேலர்களின் அனுதின தேவைகளைச் சந்தித்து, ஒரு குறைவும் இல்லாமல் அனைத்திலும் நிறைவாய் நடத்தின நம் தேவன், அவர் உண்மையுள்ளவரானபடியால், இன்றைக்கு உங்கள் வாழ்வில் காணப்படும் வறட்சியான சூழ்நிலைகள் எதுவாயினும் அதனை செழிப்பாய் மாற்ற நம் தேவன் போதுமானவர் என்பதை உறுதியோடு விசுவாசியுங்கள்! அவர் உங்கள் வாழ்வின் தேவைகளுக்கேற்ப காடைகளைக் கொண்டு நிச்சயம் போஷிப்பார்! மிகவும் ஆச்சரியமாய் நடத்துவார்!

**“தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்”** (பிலிப்பியர் 4:19) ■

நிகழ்வு: கெத்சி கிளார்வின்




# ஜெபிப்போம் ஜெயமெடுப்போம்

கடந்த மாதங்களில் ஜெபத்தின் வகைகளை குறித்து பல காரியங்களை பார்த்துள்ளோம். அதன்படி ஜெபிக்க உங்களை அர்ப்பணித்திருப்பீர்கள் என்று நாங்கள் கர்த்தருக்குள் விசுவாசிக்கிறோம். இதை வாசிக்கும் வாலிபர்களாகிய நீங்கள், குறைந்தது ஒரு மணி நேரமாவது கர்த்தருடைய சமூகத்தில் ஜெபிக்க ஆர்வம் கொண்டவர்களாய் இருந்தும் ஜெபிக்க முடியாமல் இருப்பீர்களானால் இந்த பகுதி உங்களுக்கே உரியது.

“ஒரு மணி நேரம் எப்படி ஜெபிப்பது? எதற்காக ஜெபிப்பது? 5 நிமிடத்திற்குள் நான் அனைத்து காரியங்களுக்காகவும் ஜெபித்து முடித்து விடுவேனே! ஒரு மணி நேரம் எப்படி ஜெபிக்கப் போகிறேன்? என்கிறீர்களா! இதற்கு எவ்வாறெல்லாம் முயற்ச்சிப்பது என்பதைக் குறித்து நாம் தொடர்ந்து இதில் காண்போம். மேலும், நாளின் முதல் மணி நேரத்தை கர்த்தருடைய சமூகத்தில் துவங்குவதற்கு நாங்கள் உங்களை ஊக்கப்படுத்துகிறோம். அதற்கு அதிகாலை ஜெபமே சிறந்தது.

## ஆயத்தம்!

### முந்தின நாள் ஆயத்தம்

- எந்தவொரு காரியத்திற்கும் ஆயத்தம் மிகவும் அவசியம். அதிகாலை ஜெபத்திற்கு முந்தின நாள் இரவே, உங்கள் மனதையும் சரீரத்தையும் ஆயத்தமாக்க, இரவில் வீணாக நேரத்தை செலவிடாமல், சரீரத்திற்கு தேவையான ஓய்வை கொடுக்க வேண்டும் (EARLY TO BED, EARLY TO RISE).

- அதிகாலையில் எத்தனை மணிக்கு எழும்ப வேண்டுமென்ற தீர்மானம் எடுத்துக்கொண்டு, “ஆண்டவரே, அதிகாலை இத்தனை மணிக்கு எழுந்து நான் ஜெபிக்க எனக்கு உதவி செய்யும்...” என்று ஜெபித்துவிட்டு கூடுமானால் ‘ALARM’ வைத்துவிட்டு படுக்கைக்குப் போங்கள்.

### அதிகாலையில் எழுந்தவுடன் செய்யவேண்டிய ஆயத்தங்கள்

- அதிகாலையில் எழுந்தவுடன் அப்படியே படுக்கையில் முழங்கால்படியிட்டு விடாதீர்கள். படுக்கையை விட்டு எழும்புவதே நாம் முதலில் செய்ய வேண்டிய பணி ஆகும்.

- பல் துலக்கி, முகத்தைக் கழுவி உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். ஏனென்றால் நீங்கள் சந்திக்கப் போவது சாதாரண உலக மனிதரை அல்ல, அண்ட சராசரங்களையும் தம் ஒரே வார்த்தையினால் சிருஷ்டித்த சர்வ வல்லவர் என்பதை ஒருபோதும் மறவாதீர்கள்.

- வழக்கமாக ஜெபிப்பதற்கு என்று ஒரு அறையை அல்லது ஒரு மூலையை ஒதுக்கிக்கொண்டு அனுதினமும் ஒரே இடத்தில் ஜெபிக்க பழகுங்கள்.

- அதிகாலையில் நீங்கள் ஜெபிப்பதற்கு முன்பு, உங்கள் வேதப்புத்தகம் உங்களோடு நிச்சயம் இருக்க வேண்டும். காரணம், ஜெப நேரத்தில் நீங்கள் மட்டும் கர்த்தரோடு பேசுவதில்லை, கர்த்தரும் உங்களோடு பேச நீங்கள் இடம் கொடுக்க வேண்டும்.

### ஒரு மணி நேரம் ஜெபிப்பது எப்படி?

உங்களின் ஒரு மணி நேர ஜெப நேரத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளுங்கள்.
முதல் 15 நிமிடங்கள்: துதியுங்கள், ஸ்தோத்தரியுங்கள்!
அடுத்த 15 நிமிடங்கள்: வேதத்தை தியானியுங்கள்!
அடுத்த 30 நிமிடங்கள்: ஜெபியுங்கள்!

இதனைக் குறித்து இன்னும் விளக்கமாக நாம் அடுத்த மாதப்பகுதியில் தொடர்ந்து காண்போம்! எனவே அதிகாலையில் எழும்பி ஜெபிக்க தகுந்த ஆயத்தங்களை செய்ய முயற்சியுங்கள்! இன்றைக்கும் உயிரோடிருக்கும் உன்னத தேவனோடு உறவாடுங்கள்! ■

# ஜெபக் கைகயேடு

ஜெபம்: எஸ்தர்

ஜூன் – 2022



## இந்திய காவல்துறை

இந்தியாவில் 20 லட்சத்து 91 ஆயிரத்து 488 காவலர்கள் பணியில் உள்ளனர். இதில் 2 லட்சத்து 15 ஆயிரத்து 504 பெண் காவலர்கள் ஆவர். இந்தியாவில் அதிக பெண் காவலர்களைக் கொண்ட 5 மாநிலங்களில், உத்திரபிரதேசம் 29 ஆயிரத்து 112 காவலர்களுடன் முதலிடத்திலும், 26 ஆயிரத்து 890 பெண் காவலர்களுடன் மஹாராஷ்டிரா இரண்டாவது இடத்திலும், 23 ஆயிரத்து 245 பெண் காவலர்களுடன் பீஹார் மூன்றாம் இடத்திலும், 20 ஆயிரத்து 861 பெண் காவலர்களுடன் தமிழ்நாடு நான்காவது இடத்திலும், 10 ஆயிரத்து 110 பெண் காவலர்களுடன் டெல்லி 5வது இடத்திலும் உள்ளது.





1. இந்தியாவில் பணிபுரிந்து வரும் 20 லட்சத்து 91 ஆயிரத்து 488 காவலர்களுக்கும் தேவன் நல்ல ஞானத்தையும், பாதுகாப்பையும் கொடுக்க ஜெபிப்போம்.

2. இந்தியாவில் பணிபுரியும் 2 லட்சத்து 15 ஆயிரத்து 504 பெண் காவலர்களின் பாதுகாப்பிற்காகவும், தேவன் பெண் காவலர்களைக் கொண்டு பெரிய காரியங்களை செய்யவும் ஜெபிப்போம்.

3. காவல்துறையில் பணிபுரியும் ஆயிரக்கணக்கானோர் வேலைப்பளு, மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருப்போருக்கு, தேவன் நல்ல சுகம் பெலன் ஆரோக்கியம் கொடுக்க ஜெபிப்போம்.

4. காவல்துறையில் பணிபுரிவோருக்கு தகுந்த ஓய்வுகள் கொடுக்கவும், பணிச் சுமைகள் குறைக்கப்படவும் ஜெபிப்போம்.

5. பணிச்சுமைக் காரணங்களால் குடும்பங்களுக்குள் சண்டை, பிரிவினைகள் ஏற்படுவது தடுத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.

6. காவல் துறையில் பணிபுரிவோருக்குள் தற்கொலை ஆவியைக் கொண்டு வந்து தற்கொலை செய்ய வைக்கிற ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

7. காவல்துறையில் பணிபுரிவோர் பல்வேறு சம்பவங்களால் மரணமடைவது தடுக்கப்படவும், மன சந்தோஷத்துடன் செயல்படவும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட ஒவ்வொருவரும் முயற்சி எடுக்கவும் ஜெபிப்போம்.

8. காலிப் பணியிடங்களை நிரப்பி, காவலர்களின் பணிச்சுமைகள் குறைக்கப்பட அரசு ஆவன செய்யும்படி ஜெபிப்போம்.

9. காவல்துறையில் காணப்படும் ஊழல்கள் முற்றிலும் ஒழியவும், நேர்மையானவர்களை பணியமர்த்தப்படவும் ஜெபிப்போம்.

10. காவல்துறையில் உள்ள உயர் அதிகாரிகள் அவர்களுக்கு கீழிருக்கும் காவலர்களை நல்மனதுடனும், புரிந்து கொண்டு செயல்படுகிறவர்களாக மாற ஜெபிப்போம்.



# மின் உற்பத்தி

\# இந்தியாவில் தற்போது 7 இடங்களில் அணுமின் நிலையங்கள் இயங்கி வருகின்றன. மஹாராஷ்டிரா மாநிலம், தாராப்பூர் அணுமின் நிலையத்தில் 4 அணு உலைகள் செயல்பாட்டில் உள்ளன. இங்கு தலா 160 மெகாவாட் திறன் கொண்ட 2 கொதிநீர் அணு உலைகளும், தலா 540 மெகாவாட் திறன் கொண்ட 2 அழுத்தப்பட்ட கனநீர் அணு உலைகளும் உள்ளன.

\# நிலக்கரி பற்றாக்குறையால் நாடு முழுவதும் மின்தடை ஏற்படும் அபாயம் நிலவுகிறது. நாட்டின் மொத்த மின் உற்பத்தியில் 70% மின்சாரம் அனல்மின் நிலையங்கள் வாயிலாகவே கிடைக்கிறது. அனல் மின்நிலையங்கள் தான் இந்தியாவின் மின்சார தேவைக்கு பெருமளவில் ஆதாரங்களாக உள்ளன.



1. இந்தியாவில் இயங்கி வரும் அணுமின் நிலையங்கள் சரியான முறையில் செயல்படவும், மின் உற்பத்தி அதிகமாக உற்பத்தி செய்யப்படவும் ஜெபிப்போம்.
2. நிலக்கரி பற்றாக்குறை இல்லாமல் கிடைக்கப்பெற்று, மின்தடைகள் தடுக்கப்பட ஜெபிப்போம்.
3. இந்தியா முழுவதும் இருக்கும் 135 அனல் மின் நிலையங்களிலும் நிலக்கரி தடையில்லாமல் கிடைக்கப்பெற ஜெபிப்போம்.
4. மின்தடையினால் விவசாயம் மற்றும் தொழிற்சாலைகள் முடக்கப்படும் அபாயத்திலிருந்து முற்றிலும் விடுபட ஜெபிப்போம்.
5. மின்சாரம் தடையில்லாமல் எல்லா மாநிலங்களிலும் கிடைக்கப்பெற ஜெபிப்போம்.
6. தேவையான அளவு நிலக்கரி இறக்குமதி செய்ய அரசு துரித நடவடிக்கை எடுத்து இந்தியாவின் மின்சார நெருக்கடியை குறைக்க ஜெபிப்போம்.
7. நிலக்கரிப் பற்றாக்குறையால் மின்வெட்டு ஏற்பட்டு சிறுதொழில்கள் அழிந்துவிடாதபடிக்கு ஜெபிப்போம்.
8. குறைந்த அளவு நிலக்கரி இருப்பு உள்ள அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரி ஏற்றிச் செல்ல போதுமான போக்குவரத்து வசதிகள் கிடைக்கப்பெற ஜெபிப்போம்.
9. நம் தேசத்தின் மக்கள் மின்சாரத்தை வீணாக்காமல், தேவைக்கு ஏற்ப பயன்படுத்த ஜெபிப்போம்.
10. மின்சார வாரியத்தில் காலிபணியிடங்கள் நிரப்பப்படவும், அணுமின் நிலையங்களில் தகுந்த பாதுகாப்பு உண்டாகவும் ஜெபிப்போம்.

# மாணவர்கள் தற்கொலை



இந்தியாவில் கடந்த 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையிலான பத்து ஆண்டுகளில் நாடு முழுவதிலும் 81 ஆயிரத்து 758 மாணவ மாணவிகள் தற்கொலை செய்துள்ளார்கள். 57% தற்கொலைகள் 2018ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டுகளில் நிகழ்ந்துள்ளது. இதில் 10 ஆயிரத்து 159 மாணவ மாணவிகள் தேர்வுகளில் தோல்வி அடைந்ததால் தற்கொலை செய்ததாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இந்தியாவில் 2020ஆம் ஆண்டு மட்டும் தினமும் சராசரியாக 34 மாணவர்கள் தற்கொலை செய்துள்ளதாக தெரிவிக்கின்றனர். நாடு முழுவதும் அந்த ஆண்டில் மட்டும் 12,500 மாணவர்கள் தற்கொலை செய்துள்ளதாக செய்தி குறிப்பு அறிவிக்கிறது.

1. மாணவர்கள் தேர்வில் தோல்வி அடைவதாலோ, மதிப்பெண்கள் குறைவாக எடுப்பதாலோ, தற்கொலை தான் முடிவு என்ற எண்ணத்திற்கு கொண்டு செல்லும் பொல்லாத ஆவியை கட்டி ஜெபிப்போம்.
2. படிக்கும் ஒவ்வொரு மாணவ மாணவிகள் மீதும் கர்த்தருடைய பாதுகாப்பு உண்டாக ஜெபிப்போம்.
3. மனஅழுத்தத்தைக் கொண்டு வந்து, தற்கொலையை தூண்டுகிற ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.
4. எதிர்காலத்தைக் குறித்த பயங்கள் விலக ஜெபிப்போம்.
5. மேற்படிப்புக்காக காத்திருக்கும் மாணவர்களுக்கு அவர்கள் விரும்பும் பாடங்கள் கிடைக்கப் பெற ஜெபிப்போம்.

ஊழிய பயணம்: வயலா




பகுதி 5

## பேதுரு மல்குஸின் காதை வெட்டுதல்

அந்த வியாழக்கிழமை இரவில், கெத்செமனே தோட்டத்தில் தூக்க கலக்கத்தில் இருந்த பேதுருவுக்கு, திடீரென்று பந்தங்கள், தீவட்டிகள் ஆயுதங்களோடு நூற்றுக்கணக்கான போர்ச்சேவகர், பிரதான ஆசாரியர் பரிசேயரின் ஊழியக்காரரும் வந்து நிற்பதை பார்த்தவுடன், தூக்கம் கலைந்து பயமும் திகிலும் பதற்றமும் பிடித்துக் கொண்டது. யாரைத் தேடுகிறீர்கள் என்று துணிச்சலோடு இயேசு கேட்கிறார். நசரேயனாகிய இயேசுவை என்று பெரும்படையின் நடுவிலிருந்து பதில் வந்தது. நான் தான் என்று, இயேசு கூறியதிலிருந்த ஆற்றலைத் தாங்க முடியாமல் யாவரும் பின்னிட்டுத் தரையில் விழுந்தனர். தாங்கள் கைது செய்ய வந்திருப்பவர் சாதாரண நபரல்ல, சொற்களில் மகா ஆற்றலுள்ளவர் என்பதை அறிந்துக் கொள்ளும்படி அவர்களுக்கும் ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. இத்தகைய சூழ் நிலையிலும் இயேசு பயமோ, கலக்கமோ இல்லாமல் நிதானமாக, தைரியமாக நின்று பேசுவது, பேதுருவை வியப்பில் ஆழ்த்தியது. ஆனால் சீஷர்களின் மனநிலையை அறிந்த இயேசு, நான் தான் இயேசு என்று மீண்டும் கூறி தன்னுடைய சீஷர்களைப் போக விடுமாறு கேட்கிறார். எந்த ஒரு மனிதனும் தான் பிரச்சனைகளை சந்திக்கும் போது, கடினமான சூழ்நிலைகளைக் கடக்கும் போது, தனக்கு நெருங்கியவர்கள் தன்னுடைய இக்கட்டான சூழ்நிலையில் இருந்து தன்னை காப்பாற்றவுமே விரும்புவர். ஆனால் இயேசுவோ மரணத்திற்கு அஞ்சாமல் துணிச்சலாக நின்று, தன்னுடைய சூழ்நிலை தன் சீஷர்களை பாதிக்காமல் அவர்களை பத்திரமாக தங்கள் இல்லங்களுக்கு அனுப்பிவிட முயற்சிக்கிறார்.




இயேசுவின் தெய்வீக தன்மையும், சீஷர்கள் மேல் இயேசு வைத்திருக்கும் அன்பையும் அவர்களை பாதுகாக்க அந்த சூழலில் அவர் கரிசனையோடு எடுக்கும் முயற்சியையும் பார்த்து பேதுரு நெகிழ்ந்து போனார். இயேசுவை கைது செய்யாமல் எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற துடிப்போடு பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனாகிய மல்குஸின் வலது காதை வெட்டுகிறார். மீனை வெட்டுபவர்கள் முதலாவது காது போல் இருக்கும் துடுப்பை (Pectoral fins) வெட்டுவார்கள். அதே பழக்கத்தில், மல்குஸின் காதையும் வெட்டி விட்டார் என்ற சுவாரஸ்ய கதையும் உண்டு. பேதுருவின் முன் கோபமும், துணிச்சலும், இயேசுவின் மேலுள்ள அன்பும் அவரை இவ்வாறு செயல்பட வைத்தது. பயமும் பதற்றமும் உள்ளத்தில் இருந்தாலும், கையில் பட்டயம் இருந்தாலும்

வேலைக்காரனைக் கொலை செய்ய பேதுரு முற்படவில்லை. நிதானத்தோடு கைது செய்யும் நிகழ்வை தடுக்கவே முயலுகிறார். இருப்பினும் இயேசுவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து பட்டயத்தை உறையில் போடுகிறார். ஒரு சீடன் இயேசுவை முத்தத்தினால் காட்டிக் கொடுக்கிறான். மற்ற சீஷர்கள் எங்கே போனார்கள் என்றே தெரியவில்லை. பேதுரு மட்டும் தனித்து நின்று இயேசுவோடு, இயேசுவுக்காக அத்தனை போர் வீரர்கள் மத்தியில் மல்குஸின் காதை வெட்டியது பேதுரு விசேஷித்தவர் என்பதைக் காட்டுகிறது.

## இயேசுவை பேதுரு மறுதலித்தல்

இந்த சம்பவம் ஒரு முக்கிய சம்பவமாக புதிய ஏற்பாட்டின் நான்கு சுவிசேஷத்திலும் எழுதப்பட்டுள்ளது (மத். 26:58, 69-74; மாற்கு 14:54,66-72; லூக்கா 22:54-62; யோவான் 18:15-18, 24-27). இயேசு கைது செய்யப்பட்டு அழைத்து செல்லப்படுவதை பேதுருவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மற்ற சீஷர்கள் எல்லாரும் இயேசுவை விட்டு ஓடிப் போனார்கள் (மத். 26:56). பேதுருவின் மனது ஓடி ஒளிய விரும்பவில்லை. இயேசுவுக்கு என்ன நடக்குமோ என்று மனது தத்தளித்துக் கொண்டிருந்தது. எனவே தூரத்திலே இயேசுவைப் பின் தொடர்ந்து பிரதான ஆசாரியனாகிய காய்பாவின் அரண்மனை முற்றத்தில் சேவகரோடே உட்கார்ந்து குளிர் காய்ந்து கொண்டிருக்கிறார். அப்பொழுது பிரதான ஆசாரியனுடைய வேலைக்



காரிகளில் ஒருத்தி, நீயும் நசரேயனாகிய இயேசுவோடே இருந்தாய் என்கிறாள். உடனே பேதுரு, நான் அறியேன், நீ சொல்லுகிறது எனக்கு தெரியாது என்று எல்லாருக்கும் முன்பாக முதல் முறை மறுதலிக்கிறார். உடனே சேவல் கூவுகிறது. ஆனால் பேதுருவின் மனதில் இருந்த பயத்தினாலும் கலக்கத்தினாலும் பேதுரு அதை கவனிக்கவில்லை. மீண்டும் வாசல் மண்டபத்தில் வந்து உட்காருகிறார். வேறொரு வேலைக்காரி; இவனும் நசரேயனாகிய இயேசுவோடு கூட இருந்தான் என்றவுடன், அந்த மனுஷனை நான் அறியேன் என்று இரண்டாம் முறை மறுதலித்து ஆணையிடுகிறார் பேதுரு. மேலும் அருகே நின்றவர்கள் மெய்யாகவே, நீ அவர்களில் ஒருவன், நீ கலிலேயன், உன் பேச்சு அதற்கு ஒத்திருக்கிறது என்று கூறியவுடன், நீங்கள் சொல்லுகிற மனுஷனை அறியேன் என்று சொல்லி சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கி மூன்றாம் முறையும் மறுதலிக்கிறார். உடனே சேவல் இரண்டாம் முறை கூவிற்று. இப்பொழுது தான் இயேசு கூறிய வார்த்தை பேதுருவின் நினைவிலே வருகிறது. அப்பொழுது கர்த்தர் திரும்பி பேதுருவை நோக்கிப் பார்த்தார். பேதுருவால் அந்தப் பார்வையை தாங்கிக் கொள்ள முடியவில்லை. மனம் உடைந்து விட்டது. தனியே அழுவதற்கு ஒரு இடம் தேடி வெளியே போய், தன்னுடைய செய்கையைக் குறித்து தானே மனம் நொந்து, வருந்தி அழுகிறார். மனம் திரும்புகிறார்.

ஒருவேளை மற்ற சீஷர்கள் போல் எங்காவது ஓடி ஒளிந்து இருந்தால், இப்படி ஒரு சோதனையே வந்து இருக்காது. ஆனால் உம்மோடுகூட மரிக்க வேண்டியதாயிருந்தாலும் மறுதலிக்க மாட்டேன் என்று சொன்ன வாய், இயேசுவை மூன்று முறை மறுதலித்து விட்டது. ஆனால் யூதாசை போல் குற்ற மனச்சாட்சியினால் சாவைத் தேடவில்லை. இயேசுவிடம் மன்னிப்புக் கேட்டு, மீண்டும் அவருடனான உறவை உயிர்ப்பித்து, குற்ற மனசாட்சியை மேற்கொள்ள விடாமல் மீண்டும் சகஜ நிலைக்கு திரும்புகிறார். அதுவரை பரிசுத்த ஆவியினால் மறுபிறப்படையும் அனுபவத்தை மற்ற சீஷர்களோ, பேதுருவோ பெற்றிருக்கவில்லை. கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின் அவர்கள் மேல் ஊதி (யோவான் 20:22) பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறும் வரை பரிசுத்த ஆவி அவர்களுக்கு கிடைக்கவில்லை. பரிசுத்த ஆவி உங்களில் வரும் போது யூதேயாவிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிப் பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் (அப். 1:8) என்று இயேசு கூறுகிறார். எந்த அன்னா, காய்பா வீட்டில் பேதுரு இயேசுவை மறுதலித்தாரோ, அதே இருவரும் இருக்கும் இடத்தில் அவர்களுக்கு முன்பாக, 'உங்களால் சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்து' என்று பரிசுத்த ஆவியின் பெலனால் பேதுரு தைரியமாக முழங்குகிறார் (அப். 4:6,10). எனவே பேதுருவின் மறுதலிப்பு அக்கிரம செயல் என்று சொல்வதை விட அவரின் பெலவீனமே காரணம் என்றே கூறலாம்.

**(பேதுருவோடு ஒரு பயணம் இன்னும் பல சுவாரஸ்ய தகவல்களோடு..... தொடரும்.)**

# Revival IGNITERS

## EVERY 1ST SUNDAY
(5TH JUNE)

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center,
Ajantha Mahal, No.3,6th West
Cross Road, Gandhi Nagar.
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center,
No:62 2nd Floor, Benny
Kumaran Main Road.
9442082200

**TIRUPATI (3PM)**
Old Community Hall,
West Church.
9985033401 | 9442885315

**TUTICORIN (3PM - 5:30 PM)**
Gethsemane Prayer Center,
Jehovah Jireh Towers,
51/8D/3, 1st Floor, Tiruchendur
Road, Muniasamypuram,
(Land mark : South Police
Station to Kamaraj college Road)
9442885315

வாலிபர்கள் தங்களுடைய
ஆவிக்குரிய வாழ்வில் அனல்
கொண்டு எழும்பவும், வேதத்தின்
ஆழமான இரகசியங்களை
அறியவும், தங்கள் தேசத்திற்காய்
கூடி ஜெபித்து பெலப்படும் ஓர்
இடமாகவும் IGNITERS கூடுகை
அமைகிறது. நீங்களும்
இக்கூடுகையில் பங்குபெற்று
பெலன் அடையலாமே! உன்னை
பெலப்படுத்திக் கொண்டு,
பிறரையும் பெலப்படுத்த
ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

## EVERY 2ND SATURDAY
(12TH JUNE)

**MADURAI (4:30 - 6:30PM)**
Gethsamane Prayer Centre
2/56, Upstairs, 1st Street, Main
Road, Subramaniya Puram.
9750955548 | 0452-2677300

## EVERY 2ND SUNDAY
(11TH JUNE)

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School,
Opp Rly. Station.
9597927799 | 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsemane Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, M.C.Road.
9444381971 | 9488475315

**VILLUPURAM (3 - 6PM)**
Jesus Redeems Office
Dhanalakshmi Garden Behind
Lakshmi Hospital Villupuram .
8344411022 | 9442885315

**KOVILPATTI (3PM – 5.30PM)**
St. Paul's Matriculation School,
Kovilpatti.
9750955548 | 9787322334

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building
R.A. Nursing Institute SCV
Computers (top floor) Main
Road, Alangulam, Near Union
Office Opposite.
9965377427 | 9750955548

IGNITERS

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center, No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor.
9750955548 | 9976766422

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School, Surandai.
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
Getsamane prayer Center
9677858766 / 9442906567

## EVERY 3RD SUNDAY

**(19TH JUNE)**

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center Shah Complex No: 43/R4, Rajendra Nagar Trivandrum Road.
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center, No:90, 1st, Floor Arts College Rd., Near Charan Tower, Coimbatore.
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center 22A, Ist Floor, Thennur High Rd., Near KMC Bus Stop, Thennur, 9488475315

**JEBAMALAI (2PM)**
Kadaiyam (via), Keelamathapuram, Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road. 9488475315

**NALUMAVADI : (3-5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**DINDIGUL (3PM - 5:30 PM)**
CSI Sophia School, (Opp: Govt Hospital) Dindugal.
9750955548 | 6383015262

**THIRUVARUR (3:30 PM)**
Gethsamane Prayer Center, 1A/25B, Bypass Road (Opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3 - 6P.M.)**
Gethsemane Prayer Centre, MBT Road, Navalpur
9500283179 | 9442885315

**ERODE (4 PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:216, Ist Floor Near Fire Service, Gandhiji Road, Erode.
9750722000

## EVERY 4TH SATURDAY

**(25TH JUNE)**

**PERAMBALUR (5PM - 8 PM)**
Gethsamane Prayer Centre M K Complex 71, Venkatesapuram Near Bank Of Baroda, Trichy Main Road.
9788788512

## MUMBAI (5PM - 8PM

**1st sunday - Dharavi**

**2nd Sunday- Bhandup**

**3rd Sunday - Malad**

**9004882470**

**WE'RE GOING LIVE**

# REVIVAL IGNITERS

**ON SUNDAY JUNE 26TH, TIME: 3 TO 5PM**

IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH

YouTube



# RED ALERT
# சவுல்

நிகழ்வு காலேப்

மீண்டும் Red Alert மூலம் உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. இன்றைய காலத்தில் ஆசீர்வாதத்தத்தை மட்டும் மையப்படுத்தி செய்திகள், பிரசங்கங்கள், பாடல்கள் அதிக அளவில் வெளி வருகிறது. இப்படிபட்ட சூழலில் எச்சரிப்பின் வார்த்தைகள் குறைந்திருப்பதை நாம் காண்கிறோம். இந்த Red Alert பகுதியில் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், அவர்கள் வாழ்வில் செய்த சிறிய தவறினாலும், கீழ்ப்படியாமையினாலும் தேவ அழைப்பை விட்டு விலகி, பரிதாபமான முடிவை அடைந்தார்கள் என்று தியானித்து, அது நமக்கு கொடுக்கப்படும் எச்சரிக்கையாக எண்ணி நம்மை சரி செய்து கொள்ளப் போகிறோம். கடந்த முறை ஆளுகைக்கு ஆசைப்பட்ட அப்சலோமை குறித்து பார்த்தோம். இந்த முறை இஸ்ரவேலின் முதல் இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்ட சவுலை குறித்து தியானிக்கப் போகிறோம்.

சவுல் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட போது அவன் மிக தாழ்மையாகவும், கர்த்தருக்கு பயப்படுகிறவனாகவும், தீர்க்கதரிசனம் சொல்கிறவனாகவும் கூட இருந்தான். இப்படிபட்ட ஒரு நிலையில் இருந்த சவுலை தேவன் புறக்கணித்து, சவுலை இஸ்ரவேலின் மேல் அபிஷேகம் பண்ணினதற்கு மனஸ்தாபப்பட்டார் என்று வேதம் சொல்கிறது. நன்றாக ஆரம்பித்த சவுலின் ஓட்டம் முடிவில் ஏன் பரிதாபமாக இருந்தது? என்பதைப் பார்க்கலாம்.

## மனுஷரை பிரியப்படுத்த, கர்த்தரை துக்கப்படுத்தினான்!

1 சாமு. 13ம் அதிகாரத்தில், சவுல் இராஜ்யபாரம் ஏற்ற இரண்டாம் வருஷத்தில், பெலிஸ்தியர் இஸ்ரவேல் மீது படை எடுத்து வந்தார்கள் (1 சாமு. 13:5). அவர்களின் எண்ணிக்கை திரளாய் இருந்தது. ஆனால் சாமுவேல் வந்து பலி செலுத்தி, கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணின பின்பு தான் யுத்தத்திற்கு போக வேண்டும் என்று காத்திருந்தார்கள். ஆனால் சாமுவேல், குறித்த ஏழு நாட்களில் அவர் வரவில்லை, மறுபுறம் சவுலோடு இணைந்து நின்ற மனிதர்கள் கொஞ்சம் கொஞ்சமாக சிதறிப் போக ஆரம்பித்தார்கள். இப்படிப்பட்ட இக்கட்டான சூழலில் செய்வதறியாது, பதட்டத்தில் தவறான முடிவை எடுத்தான். ஆசாரியர்கள் மாத்திரம் செய்ய வேண்டிய பலி செலுத்தும் காரியத்தை மனிதர்கள் தன்னை பிரிந்து போகிறதைப் பார்த்து, அவனே செய்து முடிக்கத் துணிந்து விட்டான்.



சவுல் தன்னைச் சார்ந்து இருக்கிறானா என்று அவனை சோதித்துப் பார்க்க இப்படிபட்ட ஒரு நெருக்கமான சூழ்நிலையை அனுமதித்திருக்கலாம். ஆனால் கர்த்தரை சார்ந்திருக்காமல், அவரை விசுவாசிக்காமல் தன்னுடைய முயற்சியில், ஞானத்தில், சுயத்தில் நல்லது என்று செய்த காரியம், கர்த்தரின் பார்வையில்

பொல்லாப்பாக இருந்தது. இதனால் தேவ கோபம் அவனுக்கு விரோதமாக எழும்பி, அவனுக்கும் அவனுக்கு, பின் வரும் சந்ததிக்கும் நியமிக்கப் பட்டிருந்த இராஜ்யபாரம் அவர்களை விட்டு நீக்கப்பட்டது.

இஸ்ரவேல் தேசம் கர்த்தரின் தேசம், மற்ற தேசத்து இராஜாக்கள் தேசத்தை ஆளுகை செய்வதற்கும், இஸ்ரவேல் தேசத்தை ஆளுகிறவர்களுக்கும் வித்தியாசம் உண்டு. இஸ்ரவேல் தேசத்து ராஜாக்கள் கர்த்தரை விசுவாசித்து, அவரை மட்டுமே சார்ந்து, அவருக்கு கீழ்ப்படிந்து நடந்தால் மட்டுமே இஸ்ரவேல் தேசத்தை கர்த்தர் விரும்புகிறபடி நடத்தி செல்ல முடியும். இல்லையென்றால் தேசம் கர்த்தரை விட்டு விலகி போகும். நம்முடைய வாழ்வில் கூட கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற வேலை, குடும்பம், ஊழியம், படிப்பு ஆகியவற்றை கர்த்தரை சார்ந்து, விசுவாசித்து, கீழ்ப்படிந்து நடந்தால் மட்டுமே தேவ திட்டத்தை நிறைவேற்ற முடியும். நம்முடைய சுய பெலத்தை சார்ந்து செய்ய நினைத்தால் தோல்வியும், ஏமாற்றமுமே மிஞ்சும்.



**"உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்"** (சங்கீதம் 37:5).

## அழிக்க வேண்டியதை, அழிக்க தவறினான்!

சவுல் செய்த தவறின் நிமித்தம் இஸ்ரவேலின் இராஜ்யபாரம் அவன் சந்ததியை விட்டு எடுக்கப்பட்டாலும், சவுல் தன்னுடைய ஆளுகையை வெற்றியோடு முடிக்க வாய்ப்பு இருந்தது. ஆனால் சவுல் அதையும் செய்ய தவறி விட்டான். இஸ்ரவேலின் சத்துருக்களாகிய அமலேக்கியர்களை கர்த்தர் முற்றிலுமாக அழிக்க கட்டளையிட்டார் (1 சாமு. 15:3). ஆனால் சவுலும், ஜனங்களும் தேவனுடைய வார்த்தைக்கு முழுமையாக கீழ்ப்படியாமல், அமலேக்கிய ஜனங்கள் அனைவரையும் அழித்து, முதல்தரம், இரண்டாம் தரமான ஆட்டுக்குட்டிகளையும் நலமான எல்லாவற்றையும் அழிக்க மனதில்லாமல், அவைகளை எடுத்துக் கொண்டார்கள் (1 சாமு. 15:9). தேவனுக்கு பலி செலுத்த தான் அதை எடுத்தேன் என்று சவுல் சொன்னாலும், அது தேவனுக்கு பிரியமானதாக இருக்கவில்லை. சவுல் ஜனங்களின் வார்த்தையைக் கேட்டு அவர்களைப் பிரியப்படுத்த அந்த காரியத்தை செய்ததால், கர்த்தர் அவனைப் புறக்கணித்தார். தேவன் சவுலிடம் எதிர்பார்த்தது கீழ்ப்படிதல் மட்டும் தான். ஆனால் ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவனுக்கு முதலிடம் கொடுக்காமல் ஜனங்களின் சொல் கேட்டு நடந்ததினால் தன் அழைப்பையும், இராஜ்யபாரத்தையும் இழந்துப் போனான்.

அன்பான வாலிபர்களே! நாம் இரட்சிக்கப்பட்டு, அபிஷேகம் பெற்றிருந்தாலும், நமக்கு வரும் நெருக்கத்தில், இக்கட்டில் நாம் தேவனை விசுவாசிக்கிறோமா? அல்லது மனித ஆலோசனையைப் பின்பற்றுகிறோமா? என்று யோசித்துப் பார்த்து, எழுப்புதலுக்கு தடையாக இருக்கும் சுயம், பெருமை, கீழ்ப்படியாமை, உலக ஆசை போன்ற அழிக்க வேண்டிய காரியங்களை அழித்து, இன்று மனம் திரும்புவோமானால், தேவன் உங்களை எழுப்புதலில் பயன்படுத்துவது நிச்சயம்!! ■

**"...கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்."** (1 சாமு. 15:22).

சிறப்புக் கட்டுரை: ரவி




# இதுவே இலக்கு

என் அருமையான வாலிப தம்பி மற்றும் தங்கையே! நீங்கள் எல்லாரும் நலத்தோடும் எல்லா வளத்தோடும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பற்றிப் பிடித்து, உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் முன்னேறிச் செல்லுமாறு உங்களை வேண்டிக்கொண்டு, இம்மாதக் கட்டுரைக்குள்ளாகச் செல்வோம். இம்மாதக் கட்டுரையின் தலைப்பு ''இலக்கு (Goal)''.

இப்பூமியில் வாழும் ஒவ்வொருவருக்கும் தங்கள் வாழ்க்கையில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இலக்குகள் இருக்கலாம். ஒரு சிலர், தாங்கள் அமெரிக்காவில் உள்ள பிரசித்திப் பெற்ற ஓர் நிறுவனத்தில் நல்லதொருப் பொறுப்பில் அமர வேண்டும் என்ற இலக்கை வைத்திருப்பார்கள். ஒரு சிலர், விளையாட்டுத் துறையிலோ, மருத்துவத் துறையிலோ, இல்லை இதர துறைகளிலோ ஏதாவது பெரிய அளவில் சாதிக்க வேண்டும் என்பதை இலக்காக வைத்திருப்பார்கள். இன்னும் சொல் லவேண்டுமானால், ஒவ்வொரு நாளும் நீங்கள் செய்யும் அன்றாட பணிகள் தாமே சின்ன சின்ன இலக்குகள் நிறைந்ததுதான். உதார ணமாக, காலையில் எழுந்து குறிப்பிட்ட மணிக்குள் நீங்கள் பள்ளிக்கோ, கல்லூரிக்கோ இல்லை, வேலைக்கோ செல்ல வேண்டும் என்பது ஓர் இலக்காக அமைகிறது. ஆகவே நீங்கள் எழுந்து செய்யும் எல்லாச் செயல்களும் அவ்விலக்கை அடைய வேண்டும் என்னும் மனநிலையில் தான் செய்வீர்கள்.



ஆகவே மேற்கூறியதுபோல, சின்ன சின்ன இலக்குகள், தானாகவே நமது வாழ்க்கையில் அமைகிறது. அதற்கேற்றார்போல் நம் செயல்களும் இருக்கிறது. இவற்றில் சில இலக்குகள் நாமாக நியமிக்கிறோம், சிலது தானாக அமைகிறது. என் அன்பு நண்பர்களே, இலக்கு தான் நம் வாழ்வில் வழிகாட்டுதல், சுறுசுறுப்பான மனநிலை, முன்னேற வேண்டும் என்ற எண்ணம், செய்து முடிக்க வேண்டும் என்ற உந்துதல், விடாமுயற்சி, உழைப்பு, ஒழுக்கம், திட்டமிடுதல், இச்சையடக்கம் என பல நற்பண்புகளை நமக்குள் கொண்டு வருகிறது. இலக்கு இல்லாத மனிதன் எப்படிப்பட்ட பண்புகளை கொண்டிருப்பான்? கீழே கிடக்கும் காய்ந்த சருகுகள் (Dry Leaves) காற்றினால் எப்படி அடித்துக் கொண்டு போகப்படுமோ அதுபோல, அவன் திசை இல்லாதவனாய், அஸ்திபாரம் இல்லாதவனாய், ஒழுக்கம் இல்லாதவனாய் தன் சிற்றின்பங்களுக்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுக்கிறவனாய் இருக்கிறான். இப்படியாக, இலக்கின் முக்கியத்துவத்தையும், இலக்கு இல்லாததின் குறை பாடுகளையும், பொதுவான பார்வையில் நாம் பார்த்தோம். இனி கிறிஸ்துவைப் பின்பற்றும் வாலிப பிள்ளைகளாக, வேதத்தின் பார்வையில் இலக்கைக் குறித்து ஆராய்வோம்.

தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட நம் ஒவ்வொருவருக்கும் தேவன் ஒரு நோக்கம் வைத்திருக்கிறார். அந்த தேவ நோக்கத்தை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபடும் நாம், நம்முடைய வாழ்க்கை யாத்திரையில் அநேக இலக்குகளை நியமிக்கிறோம். தேவன் விசுவாசிகளாகிய நமக்கு வைத்துள்ள பொதுவான நோக்கம் என்பது, நாம் வாழும் வாழ்க்கை அவருக்குப் பிரியமான ஆராதனையாகவும், அவருக்கு மகிமையும், கனத்தையும் சேர்க்க வேண்டும் என்பதே.

வேதத்தில் இருந்தே இலக்கை நோக்கிய பயணித்த ஒரு சில உதாரணங்களை நாம் காண்போம். முதலாவது, பவுலடிகளுடைய வாழ்க்கையைப் பார்ப்போம். ''சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்'' (பிலிப்பியர் 3:13,14) என்று சொல்கிறார். பவுலடிகள் இயேசு கிறிஸ்துவினால் ஆட்கொண்ட பிறகு, தேவன் புறஜாதிகளிடத்தில் தன் இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தைக் கொண்டு சேர்க்கும்படி, தேவன் அழைத்த பரம அழைப்பில் மிகவும் உறுதியாய் இருந்து, தனக்குக் கொடுக்கப்பட்ட இலக்கை நோக்கித் தொடர்ந்தார். மற்றொரு இடத்தில், ''பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச்

செய்கிறோம்'' (1 கொரி. 9:25) என்று சொல்கிறார். ஆம் நண்பர்களே, நாம் நம் தேவ அழைப்பின் இலக்கை அறிந்தவர்களாக இருந்து, அதை அடையும்படி நம் வாழ்க்கையைப் பவுலடிகள் சொல்வதுபோல சீரமைத்துக் கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பார்ப்போம். அவர் தன் பிதாவாகிய தேவனுடைய சித்தத்தைச் செய்வதையே தன் இலக்காகக் கொண்டு பூமியில் வாழ்ந்தார். பாவத்தினால் தேவனுக்கும் மனுகுலத்திற்கும் இடையே ஏற்பட்டப் பிளவை, தம்முடைய சிலுவை மரணத்தினால் மூடும்படியாக நம்மை தேவனிடம் சேர்க்க வேண்டும் என்கிற இலக்கோடு பூமியில் வாழ்ந்தார். ''அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்'' (எபிரெயர் 12:2) என்று சொல்கிறது. ஆம் நண்பர்களே, இயேசு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதின் மூலம் தனக்கு கிடைக்கவிருக்கும் சந்தோஷத்தினிமித்தம், சகல கஷ்டங்களையும் சகித்து தன் இலக்கை அடைவதில் உறுதியாயிருந்தார். ஆகவே நாமும் நம்முடைய இலக்கை நோக்கிப் போகும் நம் பயணத்தில் உறுதியாய் இருந்து, நமக்காக தேவன் வைத்திருக்கும் பரிசுப் பொருளைப் பெற்றுக் கொள்ளும்படி வாழ்வோமாக. இந்தப் பயணத்தில் நாம் தனியாக இல்லை நண்பர்களே. தேவன் நம்மோடு இருக்கிறார், அநேக தேவப் பிள்ளைகள் நம்மோடு பயணிக்கிறார்கள். நமக்கு முன்பு இலக்கை அடைந்த பலர். சாட்சியாக இருக்கிறார்கள். ''ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்'' (எபிரெயர் 12:1) என்று நமக்கு நம்பிக்கையும், உற்சாகத்தையும் கொடுக்கிறது. ■

# தந்தையர் தினம்

குடும்ப நலனுக்காக தன்னுடைய உழைப்பையும், அன்பையும் தியாகம் செய்பவர் அப்பா. நமக்கு ஒரு நல்ல வழிகாட்டியாகவும், நண்பராகவும், ஆசிரியராகவும் இருப்பவர் அப்பா மட்டுமே. கடினமாக உழைத்து, தங்கள் தேவைகள், ஆசைகள் மற்றும் விருப்பங்களை தியாகம் செய்பவர் அப்பா. அப்படிப்பட்ட தன்னலமற்ற அப்பாவின் அன்பைக் கொண்டாட ஒவ்வொரு ஆண்டும் ஜுன் மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை தந்தையர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த தந்தையர் தினத்தை எப்படி கொண்டாடுவது, தந்தையை எப்படி சந்தோஷப்படுத்துவது என்று அநேகருக்கு தெரிவதில்லை. எனவே தான் இந்த தந்தையர் தினத்தை கொண்டாட உங்களுக்கு சில ஆலோசனைகள்.

### ஒரு நாள் முழுவதும் செலவிடுங்கள்:

அந்த ஒரு நாள் மட்டுமாவது உங்கள் அப்பாவை அவர் நண்பர்கள் வீடிற்க்கோ அழைத்து செல்லலாம். அல்லது வெளியூருக்கு அழைத்து சென்று சுற்றி காண்பிக்கலாம்.

### உணவு சமைத்து கொடுங்கள்:

உங்கள் தந்தைக்கு உயர்ந்த உணவுகளை கொடுக்க முடிந்தால் கொடுங்கள். இல்லையென்றால் அவர் விரும்பி சாப்பிடும் உணவை உங்கள் கையால் சமைத்து கொடுக்கலாம்.

### பரிசுப் பொருட்களைக் கொடுங்கள்:

உங்கள் தந்தைக்கு பிடித்த கலரில் ஒரு சட்டை வாங்கி கொடுக்கலாம். அல்லது அவர் விரும்புகிற காலணிகள், கடிகாரம், பர்ஸ் அப்படி ஏதாவது ஒன்று வாங்கி கொடுக்கலாம்.

### உடல் நலனைப் பேணுங்கள்:

காய்கறிகள் பழங்கள் வாங்கி சமைத்து கொடுங்கள். மருத்துவ பரிசோதனை செய்பர்கள் மறவாமல் அதை செய்யுங்கள்.

### தினமும் ஒரு மணி நேரம் பேசுங்கள்:

தினமும் ஒரு மணி நேரமாவது தங்கள் தந்தையுடன் அன்றைக்கு நடந்த நல்ல காரியமோ கெட்ட காரியமோ தந்தையுடன் பேசி தகுந்த ஆலோசனை பெற்றுக் கொள்ளுங்கள்.



# செய்திகள்!

## ஜி.எஸ்.டி கவுன்சில் பரிந்துரை மாநில அரசுகளை கட்டுப்படுத்தாது: உச்சநீதிமன்றம் தீர்ப்பு!

ஜிஎஸ்டி கவுன்சில் பரிந்துரை மாநில அரசுகளை கட்டுப்படுத்தாது. வரி விதிப்பில் ஒன்றிய, மாநில அரசுகளுக்கு சம அதிகாரம் உள்ளது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) இந்தியாவில் மிகவும் ஆக்கபூர்வமான வரி மாற்றமாக நீண்ட காலமாக கருதப்படுகிறது. இது சில மறைமுக வரிகளை உள்வாங்கி, ஜூலை 1, 2017ம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது. இது நிலையான சரக்கு மற்றும் சேவை வரிக்கு மாறுவதை நோக்கமாக கொண்டுள்ளது.

சேவை மற்றும் பொருட்களை வழங்கும் வணிகங்களுக்கான வரி விதிப்பு சட்டங்களை எளிதாக்குவதே ஜிஎஸ்டியின் முக்கிய நன்மையாகும். இதனால் வரி ஏய்ப்புக்கான சாத்திய கூறுகளை கணிசமாக குறைப்பது போன்றவற்றை செய்ய இயலும். இந்த ஜிஎஸ்டியின் வகைகளாவது, மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (சிஸ்.ஜி.எஸ்.டி), மாநில சரக்கு மற்றும் சேவை வரி (எஸ்.ஜி.எஸ்.டி), ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி (ஐ.ஜி.எஸ்.டி), யூனியன் பிரதேச சரக்கு மற்றும் சேவை (யு.ஜி.எஸ்.டி) வரியாகும்.

இந்த ஜிஎஸ்டி விதிமுறைகளை வகுப்பதற்காக தற்போது ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் 33 உறுப்பினர்கள் கொண்ட குழு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஜிஎஸ்டி கவுன்சிலின் பங்கானது, நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை விகிதங்கள், பொருட்கள் மற்றும் சேவைகளை ஜிஎஸ்டியில் இருந்து விலக்க கூடிய அதிகபட்ச வரம்பு உள்பட பல்வேறு முக்கிய பரிந்துரைகள் உள்ளது. இதைத் தொடர்ந்து இந்தியாவில் ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து தொடர்ந்து அதற்கான கூட்டங்கள் டெல்லி உள்பட சில மாநிலங்களில் நடத்தப்பட்டு வருகிறது. அதில் அனைத்து மாநில நிதியமைச்சர்களும் கலந்து கொள்வார்கள். இந்த ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் நடைபெறும்போது பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்படுவது மட்டுமல்லாமல் அதனை, மாநில அரசுகள் அமல்படுத்த வேண்டும் என்று நிர்பந்திக்கப்படுகிறது.

இந்த நிலையில் குஜராத்தை சேர்ந்த தனியார் அமைப்பு, அம்மாநில உயர்நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தாக்கல் செய்தது. அதில், 'ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் எடுக்கப்படும் பரிந்துரைகளை மாநில அரசுகள் அமல்படுத்த வேண்டும் என்று கட்டாயமாக்கப்படுகிறது. இது ஏற்கக்கூடியது கிடையாது' என்று குறிப்பிட்டிருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் எடுக்கப்படும் பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும் என்றும் கடல் சரக்குகள் மீதான ஒருங்கிணைந்த வரியை ரத்து செய்தும் உத்தரவிட்டது.

இந்த உத்தரவுக்கு எதிராக, உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை நீதிமன்றம் விசாரித்து கடந்த வாரம் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்திருந்தது. இந்நிலையில் நீதிபதி சந்திரசூட் தலைமையிலான அமர்வில் இன்று தீர்ப்பு வழங்கியது. அதில், ஜிஎஸ்டி கவுன்சிலின் பரிந்துரைகள் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளை கட்டுப்படுத்தாது. ஜிஎஸ்டி கவுன்சில் பரிந்துரைகளை பொருத்தவரையில், நம்பத்தகுந்த மதிப்பு மட்டுமே உள்ளது. ஏனென்றால் இந்தியா ஒரு கூட்டாட்சி தத்துவத்தை அடிப்படையாக கொண்டு இயங்கக்கூடிய நாடு.

குழப்பத்தை தவிர்க்கவே இந்திய அரசியலமைப்பு சட்டம், ஒன்றிய அரசுக்கு கூட்டாட்சி அதிகாரத்தை தருகிறது. ஜனநாயமும் கூட்டாட்சியும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் ஜிஎஸ்டி மீது சட்டம் இயற்றுவதற்கு நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களில் சமமான அதிகாரம் உள்ளது. அதனால் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தின் எந்த ஒரு பரிந்துரைகளையும் மாநில அரசுகள் அமல்படுத்தியே ஆக வேண்டும் என்று நிர்பந்திக்க கூடாது' என தீர்ப்பு வழங்கினர்.

– தினகரன், 19 மே 2022

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

JESUS REDEEMS MINISTRIES

50 கோடி சுவிசேஷம்
5 கோடி ஆதாயம்

VISION 2030

## இயேசு விடுவிக்கிறார்
## வாலிபர் ஊழியம்

# 10 கோடி

வாலிபர்களுக்கு சுவிசேஷம்

# 1 கோடி

வாலிபர்களை இரட்சிப்புக்குள் வழி நடத்த

**15 மணி நேர ஜெபத்திட்டம்**

தினமும் இந்த தரிசனத்திற்காக

**30 நிமிடம் ஜெபிப்பேன்**

| | | | |
|---|---|---|---|
| DAY - 1 | DAY - 2 | DAY - 3 | DAY - 4 |
| DAY - 5 | DAY - 6 | DAY - 7 | DAY - 8 |
| DAY - 9 | DAY - 10 | DAY - 11 | DAY - 12 |
| DAY - 13 | DAY - 14 | DAY - 15 | DAY - 16 |
| DAY - 17 | DAY - 18 | DAY - 19 | DAY - 20 |
| DAY - 21 | DAY - 22 | DAY - 23 | DAY - 24 |
| DAY - 25 | DAY - 26 | DAY - 27 | DAY - 28 |
| DAY - 29 | DAY - 30 | | |

Name............................................................

Mobile............................................................

Place............................................................

நீங்கள் ஜெபித்தவுடன் எங்களுக்கு photo எடுத்து 97509 55547 என்ற whatsapp நம்பருக்கு அனுப்பவும்

## ஜெபக்குறிப்புகள்

50 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும் தரிசனத்தை பெற்றிருக்கும் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள், தேவ சித்தத்தை பரிபூரணமாக செய்து முடிக்க வேண்டிய கிருபையை தேவன் கொடுக்க ஜெபிப்போம்.

இந்த திட்டத்தை 2030ம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டிய விசேஷித்த ஞானம், அபிஷேகம், பெலன் மற்றும் சுகம் அருளப்படவும், தேவன் கொடுத்த அனைத்து வாக்குத்தத் தங்கள் நிறைவேற்றப்படவும், சகோதரருக்கு விரோதமாக எழும்பும் சத்துருவின் வல்லமைகள் அழிக்கப்படவும் ஜெபிப்போம்.

10 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, 1 கோடி ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த பொறுபெடுத்திருக்கும் வாலிபர் ஊழியத்தின் முழுநேர ஊழியர்கள், இந்தியா முழுவதும் இருக்கும் REVIVAL IGNITERS, மற்றும் தன்னார்வ ஊழியர்களுக்கு, இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அபிஷேகமும், கிருபையும், வல்லமையும், ஆத்தும பாரமும் உண்டாக ஜெபிப்போம்.

**ஒரு கோடி** ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கு **ஒரு கோடி மணி நேரம்** ஜெபிக்க புதிய ஜெப திட்டங்களையும், ஜெப வீரர்களையும், ஜாமக்காரர்களையும் தேவன் எழுப்பி தர ஜெபிப்போம்.

எஸ்தர் 8ஆம் அதிகாரம் 10ம் வசனத்தின்படி, ஒரு கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷத்தை தீவிரமாக கொண்டு சென்று, நற்செய்தி அறிவிக்கும் அஞ்சர்காரர்களை தேவன் எழுப்பவும், அவர்கள் தேசத்திற்குள் அனுப்பப்படவும் ஜெபிப்போம்.

ஊடகத்தின் (தொலைக்காட்சி, சமூக வலைத்தளம் ) மூலம் சுவிசேஷத்தை தீவிரமாக எடுத்து செல்லவும், புதிய நிகழ்ச்சிகளை தயாரிக்கவும், தேவன் புதிய திட்டங்களை கொடுக்கும்படி ஜெபிப்போம்.

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25 - 05 - 2022.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.






## ஆந்திரா மாநிலம் சித்தூர் மற்றும் திருப்பூரில் வாலிபர் கூடுகை

கடந்த ஏப்ரல் மாதம் மற்றும் மே மாதத்தில் ஆந்திரா மாநிலம் சித்தூரில் 24.04.2022 வாலிபர் எழுப்புதல் கூடுகையும், மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் பனியன் கம்பெனியில் பணிபுரியும் தொழிலாளர்களுக்காக 01.05.2022 அன்று உழைக்கும் கரங்கள் என்ற கூடுகையும் நடத்த தேவன் கிருபை செய்தார். இக்கூட்டத்தில் சுமார் 750க்கும் அதிகமான வாலிபர்கள் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்று சென்றனர். இக்கூடுகையில் அநேக வாலிபர்கள் இயேசுவுக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தது மட்டுமல்லாமல் எழுப்புதலுக்காக ஜெபிக்கவும் சுவிசேஷத்தை அறிவிக்கவும் தீர்மானம் எடுத்தனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.